REGD. M. 4642

# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 6 | 22–2–48 | இதழ் 37

## அகராதியிலேயே கூடாது.

—:(0):—

புதிய தமிழகத்தின் முதல் சீர்திருத்தம் சாதி யொழிப்பே.

அந்தணர், வீரர், வைசியர், தொண்டர்' என்ற பாகுபாடு கூட எனக்கு உடன்பாடில்லை. இப்படிப் பிரித்தே வேதகாலத்தில் வாழ்ந்த ஆரியர், பிறகு வருணபேதம் ஏற்படுத்தி, அது சாதியாகி, நாலுசாதி நாலாயிரம் சாதியாகி நமது நாட்டையே வாழ வொட்டாமல் அடித்தது. சாதி என்ற மொழியே இனி நமது அகராதியில் தேவையில்லை.

சுத்தானந்த பாரதியார்.

## ஆதென்ஸ் நகரில்

16-ம் பக்கத் தொடர்ச்சி

பெரியதோர் புயல்! சாக்ரடீஸ் உயிரோடு இருந்த போது கிளம்பாத அளவிலும் வேகத்திலும் கிளம்பி விட்டது. மெலிடசும் அனிடசும், அந்தப் புயலின் வேகத்திலிருந்து தப்பித்துக்கொள்ள முடியவில்லை. "எங்கே சதிகார மெலிடஸ்?"

பழிவாங்கும் உணர்ச்சி பலம்பட்டு விட்டது. சதிகாரரை ஒழித்தாக வேண்டுமென்ற முழக்கம் வலுப் பெற்று விட்டது.

அறமன்றத்திலே நின்று, அறிவின் சின்னத்தை, அலட்சியமாகப் பார்த்து, அடாத பழிசுமத்தின, அனிடஸ், மெலிடஸ், ஆகியோர் மீது மக்களின் கோப பாய்ந்தது.

எங்கே அந்தச் சதிகாரர்கள்? மெலிடசை இழுத்துவா! அனிடசை இழுத்துவா!—மக்களின் கட்டளை.

இதோ மாபாவி! — கட்டளையை நிறைவேற்றி விட்டனர் சிலர்—பிடித்திழுத்து வந்தனர்—மெலிடஸ், கொல்லப்பட்டான்! அனிடஸ், நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டான். ஆதென்ஸ் மக்களின் ஆத்திரத்துக்கு இரையாகாமல், தப்பித்துக்கொண்டோம்—இனி எங்காவது சென்று உயிர் வாழ்வோம், என்று எண்ணினான் அறப்பன்.

"வயதானவராக இருக்கிறீர். உமக்கு மரணதண்டனை விதிக்க மனமில்லை. வேறுவிதமாக ஏதேனும் தண்டனையை நீரே கேட்டுப்பெறலாம். ஆதென்ஸ் நகரைவிட்டு, போய்விடுகிறீரா? நாடு கடத்திவிடுகிறோம். சம்மதமா?" என்று அறமன்றத்தினர் கேட்டபோது, சாக்ரடீஸ், "ஆதென்ஸ் நகரமக்களே! என் சொந்த ஊரிலே, நான் போதிப்பது, வெறுப்பைக் கிளப்பி விட்டது என்றால், நான் வெளியூர் சென்று, யாரிடம், எப்படி, அன்பைப்பெற முடியும்" என்று சொன்னார். விவேகி சொன்ன வார்த்தைகள், மக்களின் கோபத்திலிருந்து தப்பிப்பிழைக்க, ஆதென்ஸ் நகரைவிட்டு, ஓடியபோது, அனிடசுக்கு நினைவிற்கு வந்திருக்க வேண்டும். என்ன கதியானான், அனிடஸ். மரணத்தின் பிடியிலே இருந்து தப்பித்துக்கொண்டோம், என்று எண்ணிச் சென்றான் ஏமாளி, மரணம் அவனைப்பின் தொடர்ந்து சென்றது — அவன் அறியாவண்ணம்.

ஹெராக்ளியா என்ற இடம் வந்து சேர்ந்தான். அதுவும் ஊர்தானே! அங்கும் மக்கள் இருந்தனரல்லவா? அவர்களின் மனமும், மாசற்ற சாக்ரடீசைச் சதிசெய்து சாகடித்த மாபாவி, தொலைக்கப்படத் தான் வேண்டும் என்று நினைஎண்ணும். ஹெராக்ளியா வாசிகள், அனிடசைக் கண்டுகொண்டனர்.

மாபாவி இங்கு வந்திருக்கிறான்—என்ற கூக்குரல் கிளம்பிறது.

உண்மையைப் பரப்ப உழைத்த உத்தமனைக் கொல்லச் சதி செய்த உலுத்தன், இங்கு வந்திருக்கிறான்—அனிடஸ் வந்திருக்கிறான் — அறம் உரைத்த அண்ணலைக் கொன்றவன் வந்திருக்கிறான் என்று கூவினர்—மக்கள் கூடினர்—அனிடசைத் துரத்தினர்—கற்களை வீசினர் — அவனைத் துரத்தினர்—கற்கள் ஆத்திரம் அடங்கும் வரை—அவன் சாகும் வரை வீசினர். கல்லால், அடிபட்டுச் செத்தான், அனிடஸ் எனும் கயவன். சாக்ரடீசைச் சாகடித்துவிட்டோம் என்று எண்ணி முதலில் பூரித்த, புலைகள், மக்களின் கோபவெறித்துக்கு இரையாகி மாண்டனர். மாசற்ற சாக்ரடீசை, மதவிரோதி என்று முதலிலே, கலகக்காரர்பேச்சைக்கேட்டுப்பழித்து, விஷமிட்டு அந்த விவேகியைச் சாகடிக்கத் துணிந்த மக்கள், மிகவிரைவிலே தங்கள் தவறை உணர்ந்து கழுவாய் தேடினர். தங்களைத்தவறான நெறியிலே செல்லச்செய்த சதிகாரரைக் கொன்றனர். சாக்ரடீசின், அறநெறியை இனிக் கைவிடுவதில்லை என்று உறுதி கொண்டனர்.

(5-ம் பக்கம் பார்க்க)

---

4-ம் பக்கத் தொடர்ச்சி

காரணமும் அவனே — என்றாள் விமலா.

நினைத்தேன், நான். ரங்கன் உன்னை அடித்துத் துன்புறுத்தினானா? என்று டாக்டர் கேட்டார்.

விமலா சிரித்தாள். சோகத்திலும் அவளுக்கு டாக்டரின் கேள்வி சிரிப்பைத்தான் தந்தது.

"அடித்துத் துன்புறுத்த வில்லை" என்றாள் விமலா.

இந்த உரையாடல் முடியுமுன், ஒரு இளமங்கையும் மூதாட்டியும் டாக்டரின் உதவியை நாடிவந்தனர், மூதாட்டி, இளமங்கையைக் காட்டி, "டாக்டர்! என்மகளுடைய கன்னத்தை, குழந்தை கடித்துவிட்டது, பல்பட்டால் விஷமாமே—ஏதாவது மருந்து தடவுங்கள்" என்று கூறினாள். கூச்சத்துடன் இருந்த இளமங்கையின் கன்னத்திலே, குழந்தை கடித்ததால், வடுவும் இரத்தக் கசிவும் இருந்தது.

"போய்வருகிறேன், டாக்டர்!" விமலா, கூறினாள்.

அவள் குரலிலே ஓர் வகைக் குறும்பு தொனித்தது.

(தொடரும்)

---


## காலண்டர்

1. பெரியார் ஈ. வெ. ரா. 2. சி. என். அண்ணாதுரை, 3. கவிஞர் பாரதிதாசன், 4. டி. பி. வேதாசலம், 5. இரா. நெடுஞ்செழியன், 6. க. அன்பழகன், 7. ஈ. வி. கே. சம்பத், 8. என். வி. நடராசன், 9. ஏ. பி. ஜனார்த்தனம், 10. பன்னீர் செல்வம், 11. என். அர்ச்சுனன், 12. பெரியார், 13. பெரியார் மனைவி நாகம்மையார், முதலிய படங்களடங்கிய ஓர் காலண்டர் விலை 0—6—0

மேற்கண்ட படங்கள் தனி காப்பி வெளிவந்துள்ளது.

விலை 0—5—0

மாதிரி பெற 0—3—9 தபால் தலைச் சேர்த்தனுப்பினால், R. D. வழி அனுப்பிவைக்கப்படும்.

தேவைக்கு உடன் எழுதுக! தக்க இலாபம் தரப்படும்.

திராவிடன் பதிப்பகம்,
P. B. 18, வேலூர், (V. ஆ.)


---


## "வழிகாட்டி"

(உயர்தர மாதப் பத்திரிகை)

ஆசிரியர் :
க. அ. புன்னைமுத்து, கல்லூரணி.

48 பக்கங்களில் வெளிவருகிறது.

வருட சந்தா ரூபாய் (3) மூன்று.

க. அ. புன்னைமுத்து, ஆசிரியர்.
கல்லூரணி.

புதியதொடர் கதை

கற்பனைச் சித்திரம்



வாடிப்போன மல்லிகையைக் காணுபவர்கள், அது முன்னாள் வெண்ணிறத்துடன் விளங்கி நறுமணம் தந்து, மனோஹரியின் கூந்தலுக்கு ஆபரணமாக விளங்கிற்றே என்றெண்ணி அதனைக் கையிலெடுத்து வைத்துக் கொள்கின்றனரா? இல்லை! அந்த மல்லிகை வாடி வதங்கியதும், பூக்காரன் வேறு மல்லிகையைத் தொடுத்துத் தருகிறான். அதுதான் புகழப்படுகிறது!

ஆனால், விளையாடும் சிறு பிள்ளைகளும், வேறு புஷ்பம் வாங்கி வைத்துக்கொள்ள வகையில்லாதவர்களும் அந்த வாடிப்போன மல்லிகையை எடுத்து வைத்துக் கொள்வதுண்டல்லவா!

விமலா, வாடிப்போன மல்லிகை! அவளுடைய இளமை மாறி அதிக நாட்களாகவில்லை. ஆனால் மேனியின் மெருகும், வசீகரமும் வனப்பும் மங்கிவிட்டது. தங்கமேனி என்று பிறர் கூறக் கேட்டவள், தன் உடலைத்தானே கண்டு வெட்கமடையலானாள். உடல் இளைத்தது மட்டுமல்ல. அதன் பளபளப்பும் போய்விட்டது. விமலாவின், சுருண்டு திரண்ட கூந்தல், ஒரு காலத்தில், வாசனைத்தைலத்தில் மிதந்ததுண்டு. அவளுடைய முகத்தில் பாரீஸ் பவுடரும், தளுக்குப் பொட்டும் இருந்த காலமுண்டு. லோலாக்கு நாட்டியமாட, புன்னகை பாட முத்துப்பற்கள், அவளுடைய அதரமெனும் திரையைவிட்டு வெளிப்பே வருவதும், மறைவதுமாக இருந்த காலமுண்டு.

அந்த அதரந்தான் அடிபட்டு வீங்கி, பார்க்கப் பயங்கரமாக இருந்தது. அந்த வீங்கிய உதட்டுடன் தான் விமலா டாக்டர் சுந்தரேசனிடம் சிகிச்சைக்கு வந்தாள். ஜெமீன்தார் வீட்டுக் காரியஸ்தன் ஒருவனுக்குக் காய்ச்சல். அவனுக்கு 'இன்ஜக்ஷன்' செய்யும் வேலையிலே டாக்டர் ஈடுபட்டிருந்தார். விமலாவின் வீங்கிய உதட்டுக்கு, சிகிச்சை செய்ய நேரமில்லை. கம்பவுண்டர் கண்ணுசாமியைக் கூப்பிட்டு, "கண்ணு இந்த அம்மாவுக்கு என்னவென விசாரி" என்று உத்தரவிட்டார் டாக்டர்.

வீக்கத்துக்கும் மற்றும் வெடிப்பு, புண், யாவற்றுக்கும் "டின்சர்" தடவுவது கண்ணுசாமியின் வழக்கம். அந்த முறைப்படியே வீங்கிய உதட்டுக்கும் கண்ணுசாமி "டின்சர்" தடவப் போனான். டாக்டர் தன் வேலையோடு வேலையாக இதையும் கவனித்து விட்டார். "மடையா! உதடு வீக்கமென்றால்கூட டின்ச்சர்தான் போடுவதா" என்று கேட்டார். கண்ணுசாமி, விமலாவிடம் உட்காரம்மா ஒருபக்கமாக டாக்டர் வருவார் என்று கூறிவிட்டு மருந்து கலக்கச் சென்றான்.

வீங்கிய உதட்டுடன் விமலா உட்கார்ந்து கொண்டிருக்கையில் அவள் மனதில் தூங்கிக்கொண்டிருந்த எண்ணங்கள் எழுந்துவிட்டன. எண்ணு தனவெல்லாம் எண்ணலானாள்.

இந்த உதடு, நாலைந்து ஆண்டுகளுக்கு முன்பு இவ்விதம் வீங்கியிருந்தால், எவ்வளவு "ராஜோபசாரம்" பெற்றிருக்கும். எத்தனைவிதமான மருந்துகள் வலிய வலிய வந்திருக்கும். எவ்வளவு "பெரிய பெரிய" மனிதர்கள் தங்களுக்குத்தான் வீக்கம் வந்தது எனக்கருதித் துடித்திருப்பார்கள். அது ஒரு காலத்தில்! விமலா, விளையாட்டுக் கருவியாக இருந்தபோது! விமலாவின் விழி, தம்மீது ஒ[illegible]றை பாய்ந்தால் போதும் எ[illegible]லர் எதிர்நோக்கிக் கொண்டிரு[illegible]து. என்ன பணம் சேட்டாலும் சரி, விமலாவைச் சரிப்படுத்தி, அவள்நேசம் கிடைத்தால் போதும் என, ஊரிலுள்ள உல்லாசச் சீமான்கள் கூறிய காலத்தில் என்ன உபசாரம் நடந்திருக்கு! இப்போது இளமைகெட்டு, அழகை விட பிணையினில் அழகு குன்றி உல்லாச உலகில் ஒதுக்கிடம் பெற்று, உருமாறிப்போன விமலாவுக்கு உதடு வீங்கிற்று என்றால் கம்பவுண்டர் கண்ணுசாமி டின்ச்சர் தடவப்பார்க்கிறான்! அவன் பித்தன்! அந்த அதரம் எத்தனை பேரின் உணர்ச்சியை உலுக்கிக் குலுக்கிவிட்டதென்பது அவனுக்கு என்ன தெரியும். சற்று குவிந்தும், சிவந்தும், அந்த உதடு காட்சிதந்து, சங்கீதப் பிரியர்களுக்கு அளித்த விருந்தை அவன் எப்படி அறிவான். வெற்றிலை பாக்கை, ஜாதிக்காய், ஜாபத்ரி, ஏலம் லவங்கத்துடன் வாயில் விமலா குழைத்துக் கொண்டிருக்க அந்த வெற்றிலைபாக்குச் சாறு அந்த உதட்டில் படிந்து பவள நிறத்தைப் பெற்று பார்ப்பவரின் உள்ளத்தில் 'மோகாந்தகாரத்தைக்' கிளப்பிவிட்டதை கண்ணுசாமிக்கு என்ன தெரியும்!

அந்த வீங்கிய உதடு, விமலா என்ற அபலையுடையது என்பதை அவன் அறிவானே யொழிய, அந்த விமலா வெனும் தாசியின் சோகமிக்க சேதியை அவன் அறியான்.

விமலாவின் எண்ணம், பறந்து சென்றது தனது 'வகைதரும் பருவத்தில்' தான் இருந்தநிலை, இன்றுள்ள விசாரவாழ்வு; அந்த இன்பம், இந்தத் துன்பம், அந்தக் குளிர்ச்சி, இந்த எரிச்சல், அந்த செல்வம், இந்த ஏழ்மை, வீதியில் மாலை 6-மணிக்கு, விளக்கேற்ற வருவாள் வருவாள் என, தரிசனத்துக்கு மைனர்கள் காத்துக்கொண்டிருக்க, அது நன்கு தெரிந்து கையில் விளக்குடன், கருத்தில் களிப்புடன், காலில் சிலம்பு ஒலிக்க, ஜடை சற்றே ஆட, முகத்தில் சோபிதத்துடன், வெளிவந்து, இரண்டொரு விநாடி, எரிந்த விளக்கை ஏறத்தள்ளிக் கொண்டே, தன் கண்களினின்றும் கூர்மையான அம்புகளைக் கிளப்பி, இளைஞர்களின் இருதயத்தில் பாயவைத்த விமலா, இன்று வீங்கிய உதட்டின் எரிச்சலை அடக்

கிக் கொண்டு விதியே, விபரீதமோ என்றெண்ணி விம்மிக்கொண்டிருக்கும் விமலா, இரண்டு நிலைக்கும் எத்துணை வித்தியாசம். வாழ்க்கையில் இப்போது விமலாவுக்கு வரட்சி. அன்று வாழ்க்கையில் அவள் கண்டதெல்லாம் இன்பம்.

எண்ணத்தில் ஆழ்ந்திருந்தவளை, டாக்டர் சுந்தரேசன், கண்டார். அவர் மனதில் திடீரென அவள்மீது ஒரு விதமான பச்சாதாபம் உண்டாயிற்று. விரைவில் தன் வேலையை முடித்துக்கொண்டு, 'விமலாவிடம் வந்தார். விமலா, சரேலென எழுந்து நின்று கும்பிட்டாள். அவளது வணக்கத்தை, புன்சிரிப்புடன் ஏற்றுக் கொண்டார் டாக்டர்.

என்னம்மா உடம்புக்கு? என்று கேட்டார். அவள்பதில்கூறுமுன்பு நிலைமையைத் தானே தெரிந்துகொண்டு பஞ்சில்எதையோ நனைத்து, உதட்டைத் துடைத்தார். தானே துடைத்துக்கொள்வதாக விமலா கூறினாள். கேட்கவில்லை, டாக்டர். டாக்டர்களுக்கு சில பிரத்யேக உரிமைகள் உண்டல்லவா!

கையிலே, சிறு நோட்டுப் புத்தகத்தை எடுத்தார் டாக்டர் சுந்தரேசன்.

பெயர்?

விமலா!

வயது?

முப்பது—ஆனால் என்ன, நாற்பது என்று எழுதிக் கொண்டால் கூட நம்புவார்கள்.

தகப்பனார் பெயர்?

சர்வேஸ்வரன்!

இருப்பிடம்?

இப்போது டாக்டர் வீடு. இங்கிருந்து நேரே குப்பய்யர் தெருவு, இந்த மாதம் வாடகை தராவிட்டால், வேறு வீதிக்குப் போவேன்.

தொழில்?

தாசி-!

"வேடிக்கையாகப் பேசிக்கொண்டே இருந்துவிட்டேனம்மா" என்று டாக்டர் சுந்தரேசன் கூறினார். ஏனெனில் அவர்கேட்டகேள்விகளுக்கு விடை தந்துவந்த விமலா கடைசி கேள்விக்குப் பதில் கூறும்போது அவளையும் அறியாமல் கண்களில் நீர் ததும்பிற்று.

"நான் காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொண்டேன்" என்று டாக்டர் கூறினார்.

"இல்லை, டாக்டர் சார். இதிலென்ன தவறு. நான் தாசிஎன்பதை ஏன் மறைக்க வேண்டும். இப்போது என்னை தாசிலோலர்கள் உலகூட மறந்துவிட்டது. நான் தரித்திர உலகில் இப்போது குடி புகுந்துள்ளேன்" என்று விமலாகூறி டாக்டரின் உள்ளத்தை உருக்கிவிட்டாள்.

"விமலா-நீ நல்ல அறிவாளி" என்றார் டாக்டர்.

"நல்ல அழகியாகக்கூட இருந்தேன். பலரை அறிவை இழக்கும்படிகூடச் செய்தேன்" என்றுவிமலா பதிலளித்தாள்.

"உன் வாழ்க்கை வெகுரசமுள்ளதாக இருக்குமென எண்ணுகிறேன். உனக்கு சம்மதமானல், என் வீட்டுக்குவா; நான் ஒண்டிக்கார மனிதன்: என்கிழத்தாயும், வேலைக்காரரும் மட்டுமே இருக்கிறார்கள். உன் கதையைச் சொல்லும். தவறாக எண்ணாதே" என்று டாக்டர் கூறினார். விமலாபுன்னகைபுரிந்தாள். கண்ணுசாமிக்குக் கோபம், 'இவளோ ஒரு வேசி, உடுடு வீங்கி வருகிறாள்; அவளிடம் இந்த டாக்டர் எதற்காகஇவ்வளவு அக்கரை காட்டவேண்டும்" என்று எண்ணி, இந்த நாடகத்தை நிறுத்தவேண்டுமென விரும்பி,கனைத்தான், தான் இருப்பதை மறந்துவிட்டு, இருவரும் பேசுகிறார்களோ என்று—இந்த கனைப்புதான், விமலாவுக்கு புன்னகை வரச்செய்தது.

"டாக்டர் என்னை மன்னிக்கவேண்டும். தங்களிடம் கூறவேண்டிய பெரியகதை ஒன்றும் இல்லை. நான் ஒருதாசி. அலைந்துகெட்டேன். இவ்வளவுதான்" என்றாள் விமலா.

"ஆமாம் விமலா! நான் கேட்டது தவறு. உன் வாழ்க்கையைக் கூறும்படி கேட்டது பிசகு. நாம் முன்பின் பழக்கமில்லாதவர்கள்" என்று கூறினார்.

"கோபமா டாக்டர்? நான் என் கதையைக்கூறிவிடுகிறேன். நாளைக்கு இங்கேயே கூறுகிறேன். உங்கள்வீட்டிற்கு, இதற்காக வரவேண்டுமா?" என்றாள் விமலா!

"விமலா நீ வந்தாகத்தான் வேண்டும்" என்று டாக்டர்வற்புறுத்தினார்.

நான் வந்தால், உங்கள் தாயார்.... ....................? என்று இழுத்தாள் விமலா.

"தவறாக எண்ணமாட்டார்கள்" என்று உறுதி கூறினார் டாக்டர்.

சற்று கலங்கிய முகத்துடன்விமலா கூறினாள், "டாக்டரே, எனக்கே சொல்ல வெட்கமாக இருக்கிறது. நான் அங்கு வரமுடியாது. வந்தால் எனக்கு நாயகனாக இருக்கும் பாவி, என்னை நையப்புடைத்துவிடுவான். நான் அவனுடைய சொத்து. அவன் என்னை இம்சித்தாலும் அவனைவிட்டு விலகு முன்னம், நான் அடங்கித்தீர வேண்டும். அதற்குத்தான் பயப்படுகிறேன்" என்றாள் விமலா.

'அவன்யார்? என்று கேட்டார் டாக்டர்.

"ரௌடி ரங்கன், என்று பிரக்யாதி பெற்றவன். அவனுடைய வைப்பு நான். டாக்டரே, என்னைப்பற்றி நீர் சரியாகத் தெரிந்துகொள்ள, இந்த விஷயம் போதாது. நான் இப்போது வேறுவழியில்லாததால், வாழ்க்கையில் பல விபரீதங்கள் ஏற்பட்டதால், ரௌடிரங்கனின் வைப்பாட்டியானேன். ஒரு காலம் இருந்தது, ரங்கன் போன்றவர்கள் என்னை ஏறெடுத்துப் பார்க்க முடியாதகாலம். என் நாவலராக இருந்தகாலம்" என்று விமலா கூறிக்கொண்டே அழுதாள்.

டாக்டர் சுந்தரேசனுக்கு, மனம் உருகிவிட்டது. நான் எண்ணியபடியே இருக்கிறது. உன் வாழ்க்கையில் பல சோகச் சம்பவங்கள் நிகழ்ந்திருக்க வேண்டுமென எண்ணினேன். அப்படியே இருக்கிறது சேதிகளும். ரௌடி ரங்கனை எனக்கு நன்றாகத் தெரியும். போனமாதங்கூட, குடித்துவிட்டு, சண்டைபோட்டதில் அவன் மண்டையில் பலத்த காயம் பட்டது. நான் தான் மருந்து போட்டேன். ஆனால் அவனிடம் "இந்த அருமையானபொருள்" இருக்கிறது என நான் துளியும் எண்ணவில்லை என்றார் டாக்டர்.

நீங்கள் மட்டுமா, டாக்டர், என் பழைய உலகில் இருந்த யாரையும் கேட்டுப் பார்க்கலாம், நான் இவ்விதமான முரட்டுக் குடியனிடமா இருக்கத் தக்கவள் என்பதைப் பற்றி. ஆனால் டாக்டர், அவன்தான் எனக்குக் கால்வயிற்றுக் கஞ்சிவார்க்கிறான். குடிவெறியில் உதைப்பான், அடிப்பான், ஆனால் அவனன்றி வேறு திக்குமில்லை எனக்கு. டாக்டர் நான் உம்மிடம் உள்ளதைக் கூறிவிடுகிறேன். மறைக்க மனம்வரவில்லை. இந்த உதடு வீங்கியதற்குக்

(2-ம் பக்கம் பார்க்க)

# அன்று மெலிடஸ்! இன்று கோட்சே!

## ஆதென்ஸ் நகரில்

2-ம் பக்கத் தொடர்ச்சி

ஆம்! ஆனால், உத்தமர்களின் இரத்தம் உலுத்தர்களின் சதியால் கொட்டப்படும் கொடுமை நின்றுவிட்டதா? இல்லை! இல்லை! இரத்தம் சிந்தப்பட்டே வருகிறது— இன்றுவரை. ஏன்?

* * *

மெலிடஸ், அனிடஸ், எனும் இருவர், சாக்ரடீசிடம் கொண்ட பொறாமை உணர்ச்சியால், சாக்ரடீசின் செல்வாக்கினால் தங்களுடைய பழைய செல்வாக்கு, பரம்பரைபாத்யதை கெட்டுவிடுமே என்று பயந்த சுயநலக்காரருடன் கூடிக்கொண்டு சாக்ரடீஸ் வேதநிந்தகன் — கடவுள் விரோதி—என்று பழிசுமத்தி, மக்களையும் நம்பச்செய்து, சாக்ரடீசை, விஷமிட்டுக்கொல்லச் செய்தனர். ஆனால், மக்கள், தங்கள் தவறை விரைவில் உணர்ந்து, உலகப்பேரறிஞரைச் சாகடித்தோமே என்று உள்ளம் நைந்து கதறினர். கயவர், இருவரையும், கொன்றனர். அவர்கள் இருவரும் அடைந்த கதியையும், மக்களின் மனம் சென்ற வழியையும் விளக்குவதே, இதுவரை நீங்கள் படித்த கட்டுரைப் பகுதி.

* * *

“மகா ஜனங்களே! பெரியதோர் ஆபத்துக் கிளம்பிவிட்டது. நமது புராதன மார்க்கத்தை, பழங்கால ஐதீகத்தை, முன்னோர்களின் ஏற்பாட்டை, நமது சன்மார்க்கத்தை, ஒரு கயவன், சர்வகலா வல்லவன் என்று தன்னைக் கருதிக் கொண்டுள்ள அஞ்ஞானி, எதையும் நான் அழித்திடுவேன், என் ஆதிக்கத்தைப் புகுத்திடுவேன் என்று ஆர்ப்பரிக்கும் ஆணவக்காரன், ஏமாந்த நேரத்தில் மக்களைத் தன் வழி திருப்பிக் கொள்ள எண்ணும் சூதுக்காரன், பொய்யையே மெய்போல மக்கள் மனதிலே படும்படி பரப்பும் தந்திரக்காரன், புதியதத்துவங்கள் என்று பேசித் திரிகிறான்— அவனிடம் மயங்காதீர்—அறிவைப் பறி கொடுத்து விடாதீர்—வலையிலே வீழ்ந்து விடாதீர்—மார்க்கத்தைக் கெடுத்து விடாதீர்— மீட்சி இராது—கடவுள் அருள் கிட்டாது-சொன்னேன், உணருங்கள்—இன்றே அக்கொடியவனின் கொட்டத்தை அடக்குங்கள்”

—என்ற அலறலொலி கிளப்பி, மக்களை அறிவிழக்கச் செய்து, ஆத்திரம் கொள்ளச் செய்து, உலகைத் திருத்த உழைக்கும் உத்தமர்களைக் கொல்ல, நாடு கடத்த, கேடுபல செய்ய, தன்னலக்காரர்கள், ஆதிக்க வெறியர்கள் அவ்வப்பொழுது மக்களை ஏவிவிடும் செயல் புரியக் கிளம்பியபடியே இருந்திருக்கின்றனர்.

மெலிடசும் அனிடசும், சாக்ரடீசின் நாட்களில்,

கோட்சே, நமது நாட்களில்.

இடையே, எத்தனையோ ஜூடாசுகள்—பலப் பல பழிகாரர்கள்—சதிகாரர்கள்.

மக்கள், இப்படிப்பட்டவர்களின் தூண்டுதலுக்கு இடம் தந்து, தூய உள்ளத்தினரை, அழித்துவிட்டு, பிறகு, ஆர அமர யோசிக்கும் வாய்ப்புக் கிடைத்ததும், தாங்கள் செய்த தவறை உணர்ந்து, கதறி, வெட்கப்பட்டு, இனி என்றென்றும் அதுபோல வீணுரை கேட்டு வெறி கொண்டலையமாட்டோம், உத்தமர்களை அழிக்கமாட்டோம், என்று நீர் ததும்பும் கண்களுடன் நின்று, உறுதிமொழி கூறுவர். ஆனால், உலக வரலாறோ, மக்கள், அந்த உறுதிமொழியின்படி, நடந்துகொள்ளப் பல முறை தவறிவிட்டனர், என்பதை விளக்கும் சோகச்சம்பவங்களையே, நிரம்பக்கொண்டதாக இருக்கிறது.

இரண்டாயிரத்து நானூறுஆண்டுகளுக்கு முன்பு, எப்படி மெலிடசாலும் அனிடசாலும், மெய்ஞ்ஞானம் போதித்த சாக்ரடீஸ்மீது பழி சுமத்தி, மக்களையும் அவரைப்பற்றித் தவறாகக் கருதச்செய்து, அவரை அழிக்க முடிந்ததோ, அது போல, இன்றுவரை, தன்னலக்காரரால் செய்ய முடிகிறது. மெலிடசின் நாட்களுக்கும், மேதினி எங்கும் கல்வியும் தெளிவும் மிக அதிகமாகப் பரவியுள்ள இந்நாளுக்கும் இடையே, எத்தனையோ உத்தமர்கள் அறிவிழந்தவர்களின் கோபத்துக்கு இரையாகியுள்ளனர்.

மக்களின் மனம், அவ்வளவு சுலபத்திலே, வெறி உணர்ச்சியைக் கொண்டுவிடக்கூடியதாக அன்று தொட்டு இன்றுவரை இருந்து வருகிறது

அதுபோலவே, தங்கள் வெறி உணர்ச்சியினால் ஏற்பட்ட விபரீதத்தை அவர்கள் பிறகு, உணரும் நிலை ஏற்பட்டதும், முன்னால் செய்த காரியதனுக்காக மிக மிகத் துக்கித்து, வெட்கப்பட்டு, கழுவாய் தேட முற்பட்டு, தங்களை யாரோ கயவர்கள் கெட்ட நினைப்புக் கொள்ளும்படி செய்துவிட்டார்கள் என்று எண்ணி, அவர்கள்மீது ஆத்திரத்தைக் காட்டி, பழிவாங்க முனைந்து நிற்பதும், மக்களின் மாறாச் சுபாவமாக இருக்கிறது.

இதுபோல, மக்களின் மனம் ஏன், நிலைதடுமாறி விடுகிறது! மாசற்றவர்களைச் சந்தேகிக்கவும், அதன் காரணமாக அவர்களைச் சித்திரவதை செய்யவும், எண்ணம் பிறப்பதும், பிறகு தவறு தெரிந்து, திருந்தவும், பழைய செயலுக்காக வருந்தவும், அந்தச் செயலுக்கு யார் காரணஸ்தர்கள் என்று கண்டறிந்து அவர்களைப் பழிவாங்கக் கிளம்பவும், எண்ணம் ஏற்படுவதும், சில பல காலத்துக்குப் பிறகு, மீண்டும், மாசற்றவர்களைச் சந்தேகிக்கத் தொடங்குவதுமாகவே, மக்களின் நிலை, மாறி மாறி இருக்கிறது. எரிமலையாவது, எப்போதேனும் ஓர் சமயம், நெருப்புக் குழம்பைக் கக்கும் — கக்காதபோது, ஆபத்தை விளைவிக்காது. மக்கள் மனமோ, எரிமலை செய்யும் விபரீதமான கேடுகளைச் செய்வது மட்டுமல்ல, விசித்திரமானதோர் எரிமலையாகக் காணப்படுகிறது. ஒரு சமயம் துவேஷ நெருப்பைக் கக்குகிறது, பிறிதோர் சமயம் அன்புப் பாலைப் பொழிகிறது! அன்புப் பெருக்குக் கண்டு, இனி அவனி செழிக்கும், என்று எண்ணி மகிழ்வதற்கில்லை— ஏனெனில் மீண்டும் ஓர் சமயம், பழையபடி, நெருப்பைக் கக்கத் தொடங்கிவிடுகிறது.

மக்களின் மதி, இப்படிப்பட்ட விபரீதமும் விசித்திரமும் கொண்டதோர், எரிமலையாக இருப்பதால்தான், சாக்ரடீஸ் போன்ற உத்தமரின் இரத்தம் சிந்தப்பட்டது. பிறகு அந்தக் கறை, கண்ணீர் கொண்டு கழுவப்பட்டது. இடம் சுத்தமானதும், மீண்டும், உத்தமரின் இரத்தம்

# புத்துலகக் கருத்து வளர இடம்வேண்டும்

சிந்தப்பட்டது, கறை ஏற்பட்டது, மறுபடியும் கண்ணீர் கொண்டு கழுவப்பட்டது—இப்படியே, ஓர் சங்கிலித் தொடர், சரிதத்திலே காணப்படுகிறது. இந்த நிலைமைக்கு, ஓர் விளக்கம் வேண்டும் — விளக்கம் கிடைத்தால்தான், மானிட குலத்துக்கு இவ்விதம், அவ்வப்போது ஏற்படும் மகத்தான நஷ்டமும் கஷ்டமும் குறைய வழி ஏற்படும்—ஏற்பட்டாக வேண்டும்.

மக்கள் மனதிலே, எந்தக் கொள்கையும் கோட்பாடும், முறையும், பதிவதற்குச் சற்றுக் காலம் பிடிக்கிறது—பதிந்துவிட்டாலோ, பிறகு, கலைவதற்கு அதிககாலம் பிடிக்கிறது. மெழுகு உருகுவதற்கு நேரம் அதிகம் பிடிக்காது—இரும்பு, பழுக்கக் காய்ச்சுவதற்கு, சற்று அதிகமான நேரம் பிடிக்கிறது — அதைப் போலவே, பழுக்கக் காய்ச்சிய இரும்பினிடம் ஏறிப்போயுள்ள வெப்பத்தை விரைவிலே போக்கிவிட முடிவதில்லை — நேரம் அதிகம் தேவை அதற்கு. நெருப்பு அணைந்துவிட்டது என்பதாலோ, அல்லது, உலைக்களப் பள்ளத்திலே இல்லாமல், வெளியே அந்த இரும்புத் துண்டு இருப்பது கண்டோ, வெப்பம் அவ்வளவு இராது என்று எண்ணி, அதனைக் கையிலே எடுத்தால், கரம் வெந்திடும். வெப்பத்தை உடனடி குறைக்க, அதன்மீது குளிர்நீர் கொட்டுவதும், பொருளைக் கெடுக்கும், என்பர். அதுபோலவே, மக்கள் மனதிலே, கொள்கைகள் புகுவதற்குக் காலம் பிடிக்கிறது, அதைவிட அதிகமான அளவு காலம் தேவை, புகுந்த கொள்கைகளை வெளியேற்றிவிட்டு, புதிய கொள்கைகளை உள்ளே அனுப்புவதற்கு. உள்ளே இருந்துகொண்டு அந்தக் கொள்கைகள், வெளியேற மறுத்துச் சீற, வெளியே இருந்துகொண்டு உள்ளே போயாகவேண்டும் என்று உறுதியுடன் புதிய கொள்கை போரிட, இரு சக்திகளும், ஒன்றையொன்று தாக்கும்போது, மனிதன், மிருக நிலையை அடைகிறான்—விபரீதங்கள் நேரிட்டு விடுகின்றன—பிறகு விம்முகிறான், வீழ்ந்துகும்பிடுகிறான், இனி அவ்விதம் செய்ய மாட்டேன் என்று அழுகுரல் கலந்த குரல் உரைக்கிறான்—ஆயினும் மீண்டும் தவறிவிடுகிறான்.

மனதுக்குள்ள வாயற்படி, அவ்வளவு சிறிய அளவு. எனவேதான், உள்ளே கொள்கை புகவும் சிரமம், வெளியே வரவும் கஷ்டம்—திருவிழாக் காலத்தில், S I. R. ரயில்வேயில், மூன்றாம் வகுப்பு வண்டியிலே, சாதுவும் போக்கிரியாகி, கருணை உள்ளவனும் கடினசித்தனாகி, பெண்கள் ஆண்களாகி, ஆண்கள் பித்தராகும்படியான நிலைமை ஏற்படுகிறதல்லவா!!

மனம், விசாலமானதாகவும், அதற்குள்ள நுழைவு வாயில், தாராளமான போக்குவரத்துக்கு ஏற்றபடியும் இல்லாத காரணத்தாலேதான், கொள்கை புகவும், வெளியேறவும், போராட்டமே நடைபெற வேண்டி ஏற்பட்டுவிடுகிறது. மனம், குகை போன்ற அமைப்பும் நிலையும் கொண்டிருக்கும் வரையில் இந்தக் கோர நிலைமை இருக்கும். மனம், விசாலமாக வேண்டும். நுழைவு வாயிலில் நெருக்கடி ஏற்படும்படியான நிலைமை இருக்கக்கூடாது. மக்கள், தமது மனதை விசாலப்படுத்திக்கொண்டே இருக்க வேண்டும்; ஏனெனில், ஒவ்வோர் நாளும் புதுப் புதுக் கொள்கைகள் இடந்தேடிக்கொண்டு வந்தபடிதான் இருக்கும் — விசாலம் அதிகமாகாவிட்டால், இடநெருக்கடி, நுழைவுச் சண்டை ஏற்படும்.

சாக்ரடீஸ், சிலபல புதிய எண்ணங்களை உலவச் செய்தார். கிரேக்க மக்களின் மனதிலே, அவை இடம்பெற முயற்சித்தன—ஏற்கனவே அந்த மக்கள் மனதிலே இருந்து வந்த எண்ணங்கள் புதிய எண்ணங்களுக்கு இடம் தர மறுத்தன—இது சகஜமும் கூட.

“வண்டி முழுவதும் காலியாகத்தான் போகிறது—அவசரம், ஆத்திரம், வேண்டாம்—நாங்கள் எல்லோரும் இங்கே இறங்கிவிடப் போகிறோம், இறங்க வழி விடுங்கள்—பிறகு நிம்மதியாக, நீங்கள் ஏறிக்கொள்ளலாம்.” என்று சொல்லிக்கொண்டு இருக்க இருக்க, “ஆமாம்—ஆமாம்” என்று ஆமோதித்துக்கொண்டே, இறங்குபவர்களை இடித்துத் தள்ளியும், ஜன்னல் வழியாகக் குதித்தும், சாமான்களை முன்னதாக வீசியும், சங்கடமும் பட்டு, சங்கடத்தையும் விளைவிக்கும் ரயில்வே பிரயாணிகள் தானே, நாம்! எண்ணங்களும் இப்படித்தான்.

சாக்ரடீஸ் காலத்திற்குப் பிறகு, பல்வேறு சமயங்களிலே, உலகிலே புதுப்புது எண்ணங்களை, அரசியல், சமூக இயல், மத இயல், கலைத்துறை, பொருளாதாரத் துறை எனும் பல துறைகளிலே புதிய கருத்தைப் புகுத்த அறிஞர்கள், கிளம்பிய போதெல்லாம், இந்தப் போரும் கிளம்பியபடியே தான் இருக்கிறது—மனம், போதுமான அளவு விசாலமாக்கப்படவில்லை. இதற்குக் காரணம், சாக்ரடீசுக்கு விஷமிட்டது, போன்ற சோகச் சம்பவங்கள் நடைபெற்ற காலத்திலெல்லாம், பழிவாங்குவது, அழுது உறுதிமொழி கூறுவது, என்ற அளவோடு மக்கள் இருந்துவிட்டனர்—இந்தச் சம்பவங்களின் காரணமாக, இனித் தொடர்ந்து, மனதை விசாலப்படுத்திக் கொண்டே இருந்தாக வேண்டும், என்று எண்ணி முயற்சிக்கவில்லை. பழிக்குப்பழி வாங்குவதிலே சுவை ஏற்பட்டது. சூட்சமம் மறக்கப்பட்டுவிட்டது. பழிக்குப் பழி வாங்குவது என்ற முறையைக் கையாண்டதால், மக்கள், அந்த வேலையோடு தங்கள் கடமை முடிந்ததாகக் கருதி, மன மாளிகையின் வாயற்படியைப் பழுது பார்க்கும் காரியத்தைக் கூடச் செய்யாமலிருந்து விட்டனர்.

இம்முறையேனும், நாமேனும், நமது நாட்களிலே நேரிட்ட சோகச் சம்பவத்தை, வீணாக்குதல், பழிக்குப்பழி கொட்டா என்ற பழம் நாட்களின் வெறிக்கூச்சல் என்ற காரியங்களுக்குப் பயன்படுத்தாமல், மக்களின் மனதை விசாலப்படுத்தும் காரியத்தைத் துவக்குவதற்குரிய நாள் இது, என்ற அறிவிப்பாகக் கொள்ள வேண்டும். மற்ற மக்களுக்குள்ளதை விட, இந்தப் பிரச்சினையில் நமது மக்களுக்குள்ள பொறுப்பும் அவசியமும் மிக அதிகம். இரண்டு நூற்றாண்டுகளாக, நமது மன மாளிகை, வெள்ளையரிடம் அடகு போயிருந்தது-மீட்டு நாள் அதிகம் ஆகவில்லை. கலனை பகுதி அதிகம்—

# ஏழை அழ, நாடு வாழாது

பழுது பார்க்க வேண்டிய வேலை மிகுதியாக உள்ளது-விரிவாக்க வேண்டும்-நுழைவிடத்தைப் பெரிதாக்க வேண்டும்-புதிய புதிய எண்ணங்கள், இனி வேகமாகவும் அதிகமாகவும், வரக்கூடிய-வரவேண்டிய-நேரம் இது. இதனால், மற்ற நாட்டு மக்கள் தங்கள் மனதை விசாலப்படுத்திக் கொள்வதைவிடத் திறமையாகவும், அதிக வேகத்துடனும், நாம் செய்தாக வேண்டும்-மனப்போரும், அதன் பலனாக மகத்தான நஷ்டங்களும் ஏற்படாதிருக்க வேண்டுமானால்.

மறைக்காமல் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும், சந்திரமண்டலத்தின் தன்மையை, மற்ற நாட்டவர் கண்டறிந்து கொண்டுள்ள இந்த நாட்களிலே, நாம், கோயிலிலே பழங்குடிமக்கள் புகுந்தால், ஜெகந்நாதர் கோபிப்பாரா மகிழ்வாரா, என்று ஆராயும் நிலையிலே இருக்கிறோம். இது, மனம் எவ்வளவு குறுகி, இருண்டு, இடர் நிறைந்து இருக்கிறது என்பதற்குப் போதுமான சான்று. உலகநாடுகள் பலவும், எந்த உத்தமரின் மறைவுக்காக உள்ளம் உருகி அழுகிறதோ, அவருடைய இறுதிச்சடங்கு நாளன்று கூடும் இலட்சக்கணக்கான மக்கள் முன்னிலையில், மறைந்தவரின் மனதுக்கு மிகவும் பிடித்தமான காரியத்தை நடத்திய பெருமையாவது கிடைக்கட்டும், மகானுபாவர்களே! இன்று, பூரி, ஜெகன்னாதர் ஆலயத்தைத் திறந்துவிடுங்கள், பழங்குடி மக்கள், உள்ளே செல்லட்டும், உள்ளம் மகிழட்டும், என்று உயர் நிலையிலுள்ள தலைவர்கள் வேண்டுகோள் விட்டும், கோயிற்கதவு இழுத்துப் பூட்டப்பட்டது-பண்டாவால்- அதாவது கோயில் குருக்களால்! இந்த அளவிலும் நிலைமையிலும், மனம் இருக்கிறது. இவ்வளவு குறுகி, கருகியுள்ள மனதிலே, இனி, புத்துலகக் கருத்துகள் வந்து புகவேண்டும்-எவ்வளவு கஷ்டமிருக்கிறது என்பதை உணருவதற்கே இதைக் கூறுகிறோம்.

"ஒப்பற்ற உத்தமரின் மறைவு கேட்டு, மகிழ்ச்சி கொண்டாடி, இனிப்புப் பண்டங்களையும் சிலர் வழங்கினர் என்று நான் கேள்விப்பட்டேன். அவர்களை நான், இந்தியரென்றுமதிக்கவுமாட்டேன்" என்று பண்டித ஜவஹர், சென்ற கிழமை, ஜம்முவில் பேசியிருக்கிறார்.

எப்படித் துணிவு பிறந்தது? மகிழ்ச்சிகொள்ள, மனம், அவ்வளவு குறுகி, இருண்டு கிடக்கிறது, சில பலருக்கு. இப்படிப்பட்டவர்களுக்கிடையே, எவ்வளவோ புதிய, ஆனால் தேவையான கருத்துக்களை, முறைகளைப் புகுத்தியாக வேண்டும், நாட்டுக்குப் புது வாழ்வு தேவையானால். இது எங்ஙனம் சாத்தியமாகும்? யார் மனமும் புண்படாத முறையிலும், எவரும் அச்சமுறாத வகையில் வாழ்க்கை நடத்தியும், பண்டித ஜவஹர் கூறுவது போல, பழமைக்கும் புதுமைக்கும் இடையே ஓர் புனிதப் பாலம் போல நின்ற உத்தமர் காந்தியாரையே, கொல்லும் அளவு வெறியுணர்ச்சி கிளம்ப முடிந்தது என்றால், நமது நாட்டிலே உள்ள சிலருக்கு மனம் எவ்வளவு இருட்டறையாக இருக்கிறது என்பது விளக்கமாகிறது. இந்த நிலையை மாற்றி, மனதை விசாலமாக்கி, பழைய கருத்துகள் வெளியேறவும், புதிய கருத்துகள், உள்ளே புகவும், தாராளமாக இடமும் வாய்ப்பும் திறமும் ஏற்படுத்த வேண்டும். அதுதான் சிந்திய இரத்தத்துக்கு உண்மையான மரியாதை செலுத்தும் வழியாகுமேயன்றி, சாக்ரடீசின் நாட்களிலே இருந்து நடந்து வருவது போல, உத்தமரின் இரத்தத்தை உலுத்தர்கள் சதிசெய்து சிந்துவதும், பிறகு, மக்கள் அந்த இரத்தக் கறையைத் தமது கண்ணீரால் கழுவுவதுமான முறை போதாது. நாம் கண்ணீர் பொழிவது, நமக்குள்ள சோகத்தின் கனத்தைக் குறைத்துக்கொள்ள உதவும்—அவ்வளவுதான்—ஆனால், உத்தமர்களின் உயிரைக் குடிக்கும் வெறி உணர்ச்சியை ஒழிக்க, அது மட்டுமல்ல, சக்தியுடையது—அறிவுக் கண்களில் இருந்து, கதிர்கள் தோன்ற வேண்டும்—மன இருள் அகல, மனம் விசாலப்பட. அப்போதுதான், நமது மக்கள், நானிலம் கண்டு பாராட்டும் நன்னிலை எய்த முடியும்.

"வர்ணாஸ்ரமத்துக்கு ஒரு புதிய விளக்கம்—ஜாதி பேதம்வேண்டாம், எனும் முறை.

தீண்டாமை என்பது மதத்தை, சமூகத்தை, மனிதப்பண்பை அழித்துவிடும் கொடு நோய்-எனவே அது அறவே ஆகாது.

ஏழை அழ, நாடு வாழாது, எனவே ஏழையின் வாழ்விலே இன்பம் ஏற்பட, வழிவகை காணவேண்டும்.

வேறு மதம், வேறு இனம், என்று பேதம் காட்டி, மனிதத்தன்மையை மறந்து, நாட்டிலே காட்டுப்போக்கு ஏற்படச் செய்யக் கூடாது"

இவை, உத்தமர்காந்தியார், புகுத்திய எண்ணங்கள்.

இந்த எண்ணங்களை அவர் புகுத்தியபோது கடுமையான போக்கும், கசப்பான போக்கும் காட்டவில்லை. குழந்தைக்குத் தாய் பழம் ஊட்டும் முறைப்படி, அன்புடன், சிறு சிறு அளவாகத் தந்தார். இதற்கு, அவருடைய உயிரைப்போக்கிட எண்ணம் பிறந்தது இந்த நாட்டில். இந்த நாட்டிலே இனிச் செய்யப்பட வேண்டியவைகள், கொஞ்சநஞ்சமல்ல. உலகின் பல்வேறு நாடுகளுக்குச் சென்றுள்ள தூதுவர்களைக் கேட்டால் கூறுவர், எவ்வளவு பெரிய பெரிய மாறுதல்கள், அவற்றினுக்கான புதிய எண்ணங்கள் இந்த நாட்டுக்குத் தேவை என்பதை. இவ்வளவும் புகுத்தவேண்டும். அதற்கு வழிவகை வேண்டும், மனம் விசாலமாக வேண்டும். சோகம்-சினம்-எனும் உணர்ச்சிகளைக் காட்டிப் பயனில்லை-மனதை விசாலப்படுத்தும் மகத்தான பணிபுரியும் நெஞ்சுஉரங்காட்ட வேண்டிய காலம் இது. கண்ணீர் சொரிய மட்டுமே நாமறிவோம், என்று இராமல், கடமையை உணர்ந்து, மனதை விசாலப்படுத்தும் காரியமாற்றவும் எமக்குத் தெரியும்—எம்மால் முடியும், என்பதைக் காட்டவேண்டும்.

*

## பிறப்பு

நகைச்சுவை அரசர் N. S. கிருஷ்ணன் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் T. A. மதுரம் அவர்களுக்கு 18—2—48-ல் ஒரு பெண் குழந்தை பிறந்துள்ளது.

*

# திராவிட நாடு

காஞ்சி] 22—2—48 [ஞாயிறு


## சீறும் சீமான்கள்

●

"இந்தியா, அடிப்படை முக்கியத்வம் வாய்ந்த சில குறிப்பிட்ட தொழில்களைத்தவிர, மற்றத்தொழில்களைச் சர்க்காருடையதாக்கிக் கொள்ளும், போக்கிலே இல்லை," என்று, சர். பெர்சிவல் கிரிப்பித்ஸ், எனும் வெள்ளையர், லண்டனில் பேசியிருக்கிறார்.

இவர், இந்த, டில்லி சட்டசபையில், ஐரோப்பிய அங்கத்தினர் கட்சிக்குத் தலைவராக இருந்தவர். எனவே இவருடைய வார்த்தையைப் பொருளும் மதிப்பும் உள்ளதாகவே, லண்டன் வாசிகள் எண்ண முடியும். அதிலும் அவர் பேசிய இடமோ, லண்டன் வியாபாரச் சங்கத்தில். அதிலும், கிழக்குஇந்திய வியாபாரப் பகுதிக்காக உள்ளதில் பேசினார். அவர் மேலும் பேசுகையில், "இந்தியாவில், எதிர்காலத்தில், **நப்பீல்டு—பிர்லா கூட்டுக் கம்பெனி,** போன்ற முறையிலேதான் நாட்டம் அதிகமிருக்கும்" என்றும் குறிப்பிட்டார்.

அதாவது, இந்தியா, சமதர்ம தத்துவத்தின்படி தொழில்களை மக்களுடைய தாக்கும் திட்டத்தைக் கொள்ளப்போவதில்லை—முதலாளித்வ முறையே நீடிக்கப்போகிறது—அதிலும், பிர்லா போன்ற சுதேசி முதலாளியும் நப்பீல்டு போன்ற வெள்ளை முதலாளியும், சேர்ந்து, கூட்டாகத் தொழில் நடத்தும், பங்காளி முறை, வளரும் என்று பேசியிருக்கிறார்.

இது, அங்கு கூடியிருந்த வெள்ளை வர்த்தகர்களின் உள்ளத்திலே, பூரிப்பை உண்டாக்கியிருக்கும். இந்தியாவை இழந்துவிட்டோம், எனவே இலாப வேட்டை குறைந்துவிட்டது என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு, சர். பெர்சிவல், "பயப்பட வேண்டாம்! பிர்லா இருக்கிறார்" என்று கூறுவது போலப் பேசியிருக்கிறார். வியாபாரத் துறையிலே புகுந்து தான், வைசிராய் மாளிகை அமைக்க முடிந்தது வெள்ளையரால். தன்னாட்சி பெற்ற பிறகு, அவர்களின் ஆதிக்கம், அரசியல் துறையிலே மட்டுமல்ல, மக்களின் வாழ்வைக் கட்டுப்படுத்தும் பொருளாதாரத் துறையிலே இருந்தும் அகற்றப்படும், என்று நம்பிய, கோடிக்கணக்கான மக்களும், ஆங்கில முதலாளி ஆதிக்கம் மட்டுமல்ல, பொதுவாகவே முதலாளித்வ முறையே முறிந்து போகும், சகல தொழில்களும் மக்களுக்காக நடத்தப்படும் சமதர்ம நோக்கத்துடன், என்று நம்பிய, இலட்சக்கணக்கான வாலிபர்களும், சர். பெர்சிவல், அன்னிய முதலாளியும் உள்நாட்டு முதலாளியும் பங்காளிகளாவதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது என்று பேசுவது கேட்டு, என்ன எண்ணுவர்! யாரை நொந்து கொள்வது!! ஏன், இந்திய சர்க்கார், இதனைக் கண்டிக்கக் கூடாது. தன்னாட்சிக்குப் பிறகும், இங்கு இலண்டன் துரைமார்கள், உள்நாட்டுக் கோமான்களுடன் உறவு கொண்டு, இலாப வேட்டையிலே ஈடுபடத்தான் செய்வார்கள் என்றால், இரண்டு நூற்றாண்டுகளாக இன்னலை அனுபவித்து, உருக்குலைந்து போயுள்ள கோடிக்கணக்கான மக்களின் கதிதான் என்ன ஆவது?

காங்கிரஸ், இப்படிச் சோகிக்கும் மக்களும் துடிதுடிக்கும் இலட்சியவாதிகளும் உள்ளனர் என்பதை அறியும். அவர்களின் மனதுக்கு, ஆறுதல் தருவதற்காகவாவது, சமதர்மத் திட்டமல்லா விட்டாலும், அதன் சாயல் போலத் தோன்றும் திட்டத்தைக் கூறுவோம், அதிர்ப்தியை அடக்க, என்று எண்ணி, எதிர்காலத்திலே, தொழில்வளர்ச்சி, எந்த முறையிலே இருக்கும் என்பதை விளக்கியும், சர்க்காரே, படிப்படியாகப் பல தொழில்களை நடத்த முற்படப் போகிறது என்று நம்பிக்கை கூறியும், ஒரு அறிக்கை வெளியிட்டது, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி மூலம்.

இதுகண்டதும், சீறினர், தொழில் துறையிலே உள்ள பழுப்பு நிறத் துரைமார்கள்! "ஆஹா! இப்படி எல்லாமா கூறுவது—இது என்ன போக்கு" என்று கோபமாகக்கூவிக் கொண்டு, நாட்டின் பல பாகங்களிலுமிருந்து, 50-க்கு மேற்பட்ட முதலாளிமார்கள், பம்பாயில் கூடினர், ஜனவரி 30-ந்தேதி. அவர்களின் அறிக்கை, பிப்ரவரி 4-ந்தேதி வெளிவந்திருக்கிறது.

"கமிட்டி குறிப்பிடும் முறைகள் அனுஷ்டிக்கப்பட்டால் நாட்டிலே தொழில் வளர்ச்சி ஏற்படாது—இப்போதுள்ள தொழில் அமைப்பைச் சீர்குலைத்துவிடும்—இந்தச் சமயத்திலே சமதர்ம முறைப்படி திட்டம் போட்டு வேலைசெய்தால், நாட்டின் பொருளாதாரநிலை கெட்டுவிடும், தொழில்துறையிலே முதல் போட்டுள்ளவர்களுக்குக் கஷ்ட நஷ்டம் ஏற்படும்,—இப்போது மிக அவசியமாகத் தேவைப்படுவது, உற்பத்திப் பெருக்கம்—இதற்கு, தகுதியும் திறமையும் தெரிந்தவர்கள் தொழிலை நடத்த வேண்டும்—பெரியதொழில்களைச் சர்க்கார் ஏற்று நடத்தினால், வெற்றி கிட்டாது—ஆகவே எச்சரிக்கிறோம்—"

முதலாளிமார்களின் அறிக்கையின் கருத்து இது. சமதர்மம் கூடாது—முதலாளித்துவ முறையிலே கைவைக்காதே — இலாப வேட்டை ஆடுவோம், கட்டுப்படுத்தாதே—எங்கள் ஆதிக்கத்திலே தலையிட்டால், நாசம் சம்பவிக்கும்—எச்சரிக்கை செய்கிறோம் — என்று மிரட்டுகிறார்கள்.

இலண்டனிலே, வெள்ளை வர்த்தகர், அந்தநாட்டு முதலாளிகளுக்குக் கூறுகிறார் "பயப்படாதீர்கள், சுதேச முதலாளிகள், நமக்குப் பங்காளிகளாவர்" என்று.

பம்பாயிலே, சுதேச முதலாளிகள் கூடிக்கொண்டு, பொது உடைமைக் கட்சி, சமதர்மக்கட்சி ஆகியோர் வகுக்கும் திட்டம் போலவுமல்லாத முறையில், சமதர்மத்தின் சாயலைக் கொண்ட திட்டத்தை, சர்க்காரை நடத்தும் பொறுப்பை மேற்கொண்டுள்ள, காங்கிரஸ், வெளியிட்டதற்காக, அதன்மீது சனலைக்கக்கி, பிடி சாபம், என்று பேசுகிறார்கள். அவர்களுக்கு உள்ள நாட்டுப்பற்று இதுதான்!! இலாப வேட்டைக்காடு, என்ற அளவிலே தான், நாட்டை அவர்கள் கருதுகிறார்கள். வேட்டைக்குக்கூட்டாளியும் தேடுகிறார்கள்—அந்தக் காரியத்திலே பழக்கம் பெற்ற வெள்ளையரைத் துணைக்குச் சேர்த்துக் கொள்கிறார்கள்.

"இந்துவும் முஸ்லீமும் பகைத்துக் கொண்டு, நாட்டைச் சுடுகாடு ஆக்க வேண்டாம்—" என்று தான் சொன்னார், காந்தியார்—இதற்குக் கோட்சேயிடமிருந்து குண்டுகிளம்பி அவரைக் கொன்றது. அகில இந்திய

காங்கிரஸ்கமிட்டி, தொழிற்சாலைகளைப் பறிமுதல் செய்வது, ஏற்கனவே முதலாளித்வ முறையினால் கோடிக்கணக்கிலே இலாபத்தைக் குவித்துக்கொண்டவர்களின் சொத்துகளை சர்க்கார் உடைமையாக்குவது, தொழில்கள்யாவும் சர்க்கார் நடத்துவது, என்று கூறவில்லை— படிப்படியாக, சாசர்ம இலட்சியத்தைக் கவனத்திலே வைத்துக்கொண்டு, தொழில்களைச் சர்க்கார் நடத்துவது, என்ற அளவுதான் கூறிற்று. இதற்குக் கிளம்புகிறது, முதலாளிமார்களின் முடுக்கான கண்டனமும், சாபமும். இந்த அறிக்கைக்குக் காரணமாக நின்று, முதலாளித்வ முகாமில் முன்னணியில் நின்று, பம்பாயில், கூட்டம் நடத்திய குணாளர்கள் யாரார்? இதோ பட்டியல்

சர். சோராப் சக்லத்வாலா
சர் தலால்
டாட்டா
A. D. ஷராப்
சர். சந்திரவர்க்கார்
பகவான்தாஸ் மேட்டா
சர். வாடியா
நேவிலி வாடியா
M. A. மாஸ்டர்
ரத்தன்சந் ஹீராசந்த்
ராமதாஸ் கியாசந்த்
M. L. தானுக்கார்.
சர். சினாய்
சர். சாந்திதாஸ் ஆஸ்கூரான்.
சர். விஸ்வேஸ்வரய்யா
சர். ஹோமி மேட்டா
சர். கவாஸ்ஜீ ஜிஹாங்கிர்.
சர். ஜோசப்கே
சர். சுனிலால் மேட்டா
சர். குருநாத் பேவூர்
C. P. பிராம்பில்
சர். ரகிமுத்துல்லா

சீமான்களின் சீற்றம் ஒருபுறம், அதேபோது, மத ஆதிக்க வெறியர்களின் தாக்குதல் பற்றோர்புறம், இவற்றுக்கிடையே கள்ளப்பட்டிருக்கிறது, காங்கிரஸ். சீமான்களின்சீற்றத்துக்கு அஞ்சிவிடுமானால், மக்களுக்கு மாபெரும் துரோகம் செய்ததாக முடியும்.

சீமான்களோ, எந்தச் சந்தர்ப்பத்தையும், சக்தியையும் பயன்படுத்திக் கொள்ளத் தவறுவதில்லை.

சர். சி. பி. இராமசாமி ஐயர், வேதாந்த விசாரணையில் மூழ்கி, இந்திய கலாச்சாரத்தைப்பற்றிப் பேசுவதற்காகத்தானே, அமெரிக்கா கிளம்புகிறார் என்று, பத்திரிகைகளிலே செய்தி வந்தது. அவர் இப்போது எந்த விதமான கைங்கரியம் செய்து வருகிறார் என்பது விளக்கமாகத் தெரியக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

சர். சி. பி. இராமசாமி ஐயருக்கு சான-பிரான்சிஸ்கோவில், பிப்பவரி முதல் வாரத்தில் ஒரு விருந்து நடத்தப்பட்டது! யாரால்? அமெரிக்க நாட்டு தத்துவ ஞானிகள், பாதிரிமார்கள் ஆகியோரால்? அவ்விதம் தான் இருக்கவேண்டும், ஏனெனில், வேதாந்த உபதேசம் செய்யத்தானே சர். சி. பி. அமெரிக்கா சென்றார், என்றுதான் எவரும் கருதுவர். ஆனால், விருந்து நடத்தியவர் வேதாந்தி அல்ல! அமெரிக்க பெடரல் ரிசர்வ் டாங் தலைவர், இயாஹார்ட் என்பவரும், கலிபோர்னியா பகுதியைச் சார்ந்த பணமூட்டைகளும், விருந்தளித்தனர். யாராக இருந்தால் என்ன, அவர்களுக்கும் ஒரு சமயம் வேதாந்தத்திலே விருப்பம் இருக்கும், இந்தியாவிலே இருந்து வந்திருக்கிறாரே, அவரிடம் பேசி ஏதேனும், உபநிஷத்தின் உட்பொருள், ஆகமத்தின் சிறப்பு, இவை பற்றித் தெரிந்துகொள்வோம் என்று எண்ணினார்கள் போலும், என்று கருதுவீர்கள், விருந்தின் போது, வியாசர், வசிஷ்டர், சாங்கியதத்துவம், சந்தியாவந்தன சூட்சமம், இவைபற்றியல்ல பேசியது. இரும்பு, சிமிட்டி, ஆடை, முதலிய பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள், எவ்வளவு உள்ளன, எந்த முறையிலே நடத்தப்படுகின்றன, என்பவைபற்றியே பேச்சு ஏதோ, "லோகாச்சாரமான" பேச்சா? அதுவுமல்ல! காரணத்தோடு! "நாங்கள், 'முதல்' போடத்தயாராக இருக்கிறோம், இந்தியாவில் துவக்கப்படும் தொழிலில். பணம் தேவையா? தாராளமாகத் தருகிறோம்—கடன் வேண்டுமானால் கடன், இல்லை கூட்டு சேரச்சொன்னாலும் சேருகிறோம்"—என்று விருந்தளித்த முதலாளிமார்கள், வேதாந்த விசாரணைக்காக வந்த சர். சி. பி. யிடம் கூறினர்.

அந்த ஆசாமிகளின் இலாப நோக்கம் அவ்விதம் இருக்கிறது; அதற்கு இவர் என்ன செய்வார், என்றுகே—கத்தோன்றும். "ஐயா! நான்வந்தது, இவ்விதம், அமெரிக்க முதலாளிகளுக்கு இந்திய தொழிற்சாலைகளை வேட்டைக்காடு ஆக்குவதற்கு அல்ல" என்று சர். சி. பி. கூறிவிடக் கூடாதா? கூறுவாரா? கூறினாரா? இல்லை! சான்பிரான்சிஸ்கோவிலே ஒருவார காலமாகத் தங்கி, அந்தப் பகுதியிலே உள்ள முதலாளிகள் தொழிற்சாலை அதிபர்கள் வட்டிக் கடைக்காரர்கள் ஆகியோரை எல்லாம் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தார். பேசியதோடு நின்றாரா? இல்லை.

"அமெரிக்க வட்டிக் கடைக்காரர்களும் தொழிற்சாலைகளை நடத்தும் முதலாளிமார்களும் இந்தியாவிலே தொழிற்சாலைகள் வைத்து நடத்துவதற்குப் பணம் முதல்போடத் தயாராக உள்ளனர்--இது விஷயத்திலே அவர்களுக்கு மிகுந்த அக்கறை இருக்கிறது"—என்று சர். சி. பி. பத்திரிகையிலே தம் கருத்துரையை வெளியிட்டுமிருக்கிறார்.

சீமான்கள் இப்படி, பம்பாய், இலண்டன், சான்பிரான்சிஸ்கோ முதலிய இடங்களிலே எல்லாம் இருந்துகொண்டு "மோப்பம்" பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், இலாப வேட்டைக்கு. அதேபோது, சிறிதளவு சமதர்மச் சாயல் கொண்டதாகத் திட்டம் தீட்டக் காங்கிரஸ் தயாரானாலும் சீறி விழுகிறார்கள், பிடிசாபம் என்கிறார்கள்.

சீமான்கள் எவ்வளவு சீறினாலும், சமதர்மத்தை அவர்களால் தடுக்க முடியாது ஏனெனில், பண்டிதநேரு இந்தச் சலசலப்புக்கு அஞ்சமாட்டார், என்ற நம்பிக்கை இளைஞர்களுக்கும் இலட்சியவாதிகளுக்கும் உண்டு. அவருடைய, கருத்து தீவிரமானது, நோக்கம் சிலாக்யமானது, உறுதி அசைக்க முடியாதது, நெஞ்சுரம் எவ்விதமான எதிர்ப்பையும் முறியடிக்கக் கூடியது, என்று எண்ணும்படியான முறையிலேயே, பண்டிதர், பல முறை பேசிவந்திருக்கிறார். எனவே பேராசைக்காரர்களின் மிரட்டலை அவர் பொருட்படுத்த மாட்டார், என்று எதிர்பார்ப்பது சகஜம்.

நாடு சோகத்தில் மூழ்கி இருக்கும் நேரம் இது. பண்டிதநேரு, தமது வாழ்நாளிலேயே கண்டிராத முறையிலே, நெருக்கடியைக் காண்கிறார். இந்தச் சமயத்திலே பம்பாய் முதலாளிகள் சீறுகிறார்கள். பிடிசாபம் என்று மிரட்டுகிறார்கள்.

இதுவே, இரக்கமற்றசெயல். ஆனால் அவர்கள் இத்துடன் நின்றனரா? இல்லை! பண்டித நேருவிடம், நேரிலே சென்றே, தமது கண்டனத்தைக் கூறத் துணிந்தனர். எப்படிப்பட்ட சாமர்த்தியம்! எவ்வளவு துணிவுடன்!

புதுடில்லியில், பண்டிதநேருவை, பிப்ரவரி 17ந்தேதி பேட்டி கண்டு பேசினர், இந்த கண்டனக்குரல் கிளப்பிய கண்ணியர்கள்.

சர். மோடி, A. D. ஷராப், பிர்லா சர். ஸ்ரீராம், சர். கோயங்கா, சர். முகர்ஜி, கஸ்தூரிபாய் லால்பாய் டி. எம். காட்டு-ஆகியோர் பேட்டி கண்டு காங்கிரஸ் கமிட்டி வெளியிட்ட திட்டத்தைப்பற்றித் தாங்கள் ஏற்பட்டுள்ள சந்தேகத்தையும் பயத்தையும் தெரிவித்து, விளக்கம் கேட்டனர். எவ்வளவு சுறுசுறுப்பு என்பதைக் கவனியுங்கள். நீண்ட நேரம் கலந்து பேசினராம். சர்க்கார் அந்தத் தொழிலரசர்களின் கருத்துகளை தீரயோசிக்கும் என்ற உறுதி மொழியும் பெற்றனராம்.

இது போதாதென்று டில்லியில் கூடிய இந்திய பார்லிமெண்டிலே பண்டித நேரு நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர் இது சம்பந்தமாக. சொற்பொழிவைப் படித்தால் பேசுவது பண்டித நேருதானா என்று சந்தேகம் தோன்றும்.

இந்நாட்டுப் பொருளாதார அமைப்பு சமதர்ம முறையைத் தழுவியதாக இருக்கவேண்டும். அதனால்முக்கியமானதொழில்களைச் சர்க்கார் ஏற்று நடத்தவேண்டும், விவசாயம் கூட்டுறவுப்பண்ணை முறையாகத் திருத்தப்படவேண்டும் —என்ற கருத்துள்ள ஓர் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இந்தத் தீர்மானம், தேவையில்லை, என்று கூறி, பண்டித நேரு, நீண்ட சொற்பொழிவாற்றினர். பம்பாயிலே சீறி, புதுடில்லியில் பேட்டிகண்டு, பேசிய, சர். மோடியே பண்டித நேருவைப் பாராட்டி, பரமதிருப்தி, மிகச் சந்தோஷம் என்று கூறினர் என்றால், சொற்பொழிவு, எந்த விதம் இருந்திருக்கும் என்பதை அதிகம் விளக்கத்தேவையில்லை.

தீர்மானத்தைக் கொண்டு வந்தவர், சகல ஜீவாதாரமான தொழில்களையும், சர்க்காரே ஏற்று நடத்த வேண்டும், அவைகளைத் தனிப்பட்ட முதலாளிமார்களிடம் விட்டுவைப்பதனால், நாட்டின் பொது நலன்கெடுகிறது, ஏழைபராரியாகிறான், இலட்சாதிகாரி கோடீஸ்வரனாகிறான், பொருளாதார ஏற்றத்தாழ்வு பயங்கரமான அளவில் ஏற்படுகிறது என்ற விஷயங்களைக்கூறி, அவற்றுக்கு ஆதாரமாக, காங்கிரசின் தீர்மானங்களையும் பண்டிதநேருவின் சொற்பொழிவுகளையும், மேற்கோள் காட்டித்தான் பேசினார். பண்டிதரோ, கோடீஸ்வரர்கள் கொண்டிருக்கும் சந்தேகத்தையும் அச்சத்தையும் போக்குவதற்காக, இலட்சியவாதத்தைக்கூடக் குறைத்துக் கொண்டு, பேசினர். அவருடைய சொற்பொழிவைப் படிக்கும்போது, நமக்கு உண்டாகும் மனக் கஷ்டத்தைவிடச், சொற்பொழிவை நிகழ்த்தும்போது அவருக்கு மனக் கஷ்டம் அதிகமாக இருந்திருக்கும்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் கருத்து முடிவானது அல்ல— சர்க்கார் அப்படியே ஏற்றுக்கொள்வதாகக் கூறினதுமில்லை, அவ்விதம் ஒரு நிபந்தனையும் இல்லை — என்று கூறினர்.

சர்க்காரின் தலைவரும் அவர்தான் —முதலாளிமார்களின கண்டனத்தைக் கிளறிவிட்ட அறிக்கையைத் தயாரித்த கமிட்டியின தலைவரும் அவர்தான். காங்கிரஸ், சுதந்திரத் திட்டத்தின்படி தொழில் வளர வேண்டும் என்று கடந்த 17-ஆண்டுகளாகவே கூறிவருகிறது பேச்சளவில கஷ்டமிலலை—ஆனால் செயல் முறையிலே, பலசங்கடங்கள் உண்டாகின்றன—எந்த அளவுசெய்வது, எதை முதலில் துவக்குவது, எப்படித்துவக்குவது, என்ன பலன் விளையும், என்ற பல்வேறு பிரச்னைகள் குறுக்கிடுகின்றன—என்கிறார். சர். மோடி, மகிழ்ச்சி அடையாதிருக்க முடியுமா, சர்க்காரின் சார்பிலே, இந்தப் பேச்சு கூறப்பட்டதுகேட்டு. அதிலும் பண்டித நேருவை, இவ்விதம் பேசவேண்டிய நிர்ப்பந்தத்தில் கொண்டுவந்து விட்டோமே என்று சற்றுக்கர்வங்கலந்தகளிப்பே அடைந்திருப்பார்.

காங்கிரஸ் கமிட்டி வெளியிட்ட திட்டத்துக்கும் சுதந்திரத்துக்கும் வெகுதூரம்.

இப்போதுள்ள (தனிப்பட்டவர்களின்) தொழில் அமைப்புகளைச் சர்க்கார் விலைகொடுத்து வாங்கிப் பணத்தை விரயம் செய்துவிடுவது சரியாகாது.

இப்போதுள்ள அமைப்பைக் கெடுக்கவோ, குலைக்கவோ, சர்க்கார் அவசரப்பட்டு எதுவும் செய்யப்போவதில்லை.

சர்க்காரே, பலதொழில்களைஏற்று நடத்துவது என்றால், அவைகளை எல்லாம் நிர்வகிக்க, தக்கவர்கள், நிபுணர்கள் வேண்டும். இப்போது சர்க்கார்வசம், இதற்கான வசதி இல்லை

சர்க்கார், தொழிலரசர்களின் நம்பிக்கையைக் கெடுக்க விரும்பவில்லை. அவர்களின நல்லெண்ணம் சர்க்காருக்கு வேண்டும்.

இப்போது, முதலாளித்வ முறையிலேஉள்ள தொழில்களைச்சர்க்கார், தமதாக்கிக் கொள்வதைவிட, இனிப் புதிதாகத் துவக்கப்படும் தொழில்களைச் சர்க்காருடையதாக்குவதே உசிதம். வேகமாக வளரும் விஞ்ஞானம், இன்று தொழில் துறையிலே இல்லாத புதிய சக்திகளை, பத்துப் பதினைந்துஆண்டுகளிலே அளிக்கும். அந்தப்புதிய சக்திகளை, சர்க்கார், தனிப்பட்டவர்களின் ஏகபோக உரிமையாக்காதபடி பார்த்துக் கொள்வதுடன், அவைகளைக் கொண்டு, தொழில் துறையிலே, மிகமிக வளர்ச்சியை ஏற்படுத்திக் கட்டும்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, நிர்வாகயந்திரமல்ல — யோசனைகளையே அந்தக்கமிட்டி வெளியிட்டிருக்கிறது; இந்தப்பார்லிமெண்டும், சர்க்காரும், யோசனைகளைக்கூறி, உருவாக்கி, பிறகே, செயலில்இறங்க முடியும்.

இப்போதுள்ள அமைப்பிலே திடீரென ஒருமாற்றமும் செய்து விடுவது சர்க்காரின் நோக்கமல்ல

இவைகள், பண்டித நேருவின் சொற்பொழிவிலே காணப்படும் கருத்துகள்.

சர். மோடி, மகிழ்ச்சி அடைந்தார். மக்கள்?

சீறும் சீமான்கள், பண்டிதரைக் கொண்டே பண்டிதரை மறுத்துப் பேசவைத்து விட்டோம், என்று எண்ணிக் களிப்படைவர். மக்கள்?

★

# வறண்ட வயல்—வாடிய விவசாயி

## பஞ்சம் ஏற்படுமோ என்று பயப்படும் மக்கள்

### மத்ய சர்க்காரிடம் முறையீடு

பிரிட்டிஷ் ஆட்சியின்போது நாட்டுக்கு, நாட்டிலே பதினைந்து பயங்கரப் பஞ்சங்கள் ஏற்பட்டன. அவ்வப்போது ஏதோ சிறு பரிகாரங்களைத் தேடுவதே அன்னிய ஆட்சியின் போக்காக இருந்தது. வானத்தை நோக்கித் தவங்கிடக்கும் வயல்களே ஏராளம் இந்த நாட்டிலே. மழை பெய்யாது போயினும், காலந் தவறினாலும், பஞ்சம் கிளம்பும் நிலையே இருக்கிறது. இந்தப் பயங்கர நிலைமை மாற்றியாக வேண்டும். எனவே சொந்த ஆட்சி ஏற்பட்டுள்ள இந்த நாட்களிலாவது, மத்திய சர்க்கார், பஞ்சம் ஏற்படாமல் தடுக்க, ஒரு நிரந்தரக் கமிஷன் ஏற்படுத்தி, விவசாயத் துறையிலே காணப்படும் குறைபாடுகளைக் களைந்தெறியவும், பஞ்ச நிலைமை ஏற்பட்டால், உடனடியாக உதவிதந்து, மக்கள் பட்டினியால் சாகாமலிருக்கச் செய்யவும், குறைந்தது 20, 30, இலட்சம் டன், உணவுப் பொருளை, மத்திய சர்க்கார், தயாராகக் கைவசம் வைத்திருக்கவும் வேண்டும்—என்ற கருத்துள்ள உரையாற்றி, மத்திய சர்க்கார், ஒரு நிரந்தர பஞ்சத் தடுப்புக் கமிட்டி அமைக்கவேண்டுமென்று, டில்லி மத்திய சட்டசபையில், பிப்ரவரி 4-ந் தேதி, தோழர் அனந்தசயனம் ஐயங்கார், ஒரு தீர்மானத்தைப் பிரேரேபித்தார். பலர், இதன் அவசியத்தை வலியுறுத்தினர். மத்திய சர்க்காரின், உணவு மந்திரி, கனம். ஜெயராம தாஸ் தௌலத்ராம் அவ்விதம் ஒரு கமிட்டி அமைக்க வேண்டியதில்லை என்றும், சர்க்கார் தக்கது செய்யும் என்றும் கூறினர். தீர்மானத்தை, தோழர் அனந்தசயனம் வாபஸ் பெற்றுக்கொண்டார்.

சென்னை மாகாணத்திலே ஏறக்குறைய இருபது இலட்சம் மக்களுக்கு உணவு நெருக்கடி ஏற்பட்டுவிடக் கூடும். நிலைமை மோசமாக இருக்கிறது, என்று முதலமைச்சரே அறிக்கை வெளியிட்டார்.

வறண்ட வயல்களையும், வாட்டமுற்றுக்கிடக்கும் விவசாயிகளையும், ஏக்கமிருந்த ஏழைகளையும், இந்திய உணவு மந்திரி, கனம். ஜெயராம் தாஸ் தௌலத்ராம் அவர்களை அழைத்து வந்து, சென்ற கிழமை காட்டினர்கள். கிராமங்களிலே, உணவுப் பொருள், வேக வேகமாகக் குறைந்துவிட்டது, மழை அடியோடு இல்லாமற் போய்விட்டதால் விளைச்சல இல்லை. மத்திய சர்க்கார், உடனடியாகவும் தாராளமாகவும் உணவுப் பொருளை அனுப்பினாலொழிய, நெருக்கடியைப் போக்கமுடியாது என்பதை உணவு மந்திரிக்கு விளக்கினர்.

1946ம் ஆண்டு வெளியிடப்பட்ட குறிப்பின்படி, சென்னை மாகாணத்தின் மொத்தத்தேவையை விட இருப்பு உணவுப் பொருள், 600,000 டன் குறைவு.

இப்போதோ என்றால், 240,000 டன் குறைவு. நாலுமடங்கு அதிகரித்து விட்டிருக்கிறது, நெருக்கடி.

சென்ற வருஷத்திலே, உணவுப் பொருள் நெருக்கடி காரணமாக, வெளியிலிருந்து வரவழைத்ததால் ஏற்பட்ட செலவு, 30 கோடிரூபாய், மொத்தத்தில. இதிலே சென்னை மாகாணம் மட்டும் பத்துக்கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறது.

இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியோ, சர்க்கார் எதிர்பாராத அளவிலே உண்டாகிவிட்டது.

சென்னை மாகாண உணவு மந்திரி கனம். டாக்டர். ராஜன், இப்போது ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடிக்கான பல காரணங்களிலே, கண்ட்ரோலை எடுத்துவிட்டதும் ஒன்று என்று கூறுகிறார். மாகாண உணவுக் கமிட்டியிலே பிப்ரவரி 10ந் தேதி கனம். டாக்டர் ராஜன் பேசுகையில், "நான், கண்ட்ரோல ரத்துசெய்யப்படுவதை விரும்பவில்லை — எதிர்த்தேன்—ஆனால், மத்திய சர்க்கார், கண்ட்ரோலை ரத்து செய்வதாக வேண்டியதற்கான விவரங்களை எல்லாம் தயாரித்து அனுப்பிவிட்டார்கள். கண்ட்ரோலை எடுத்துவிட வேண்டி நேரிட்டது" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மொத்தத்திலே, கவனிக்கும் போது, மாகாண உணவுநிலைமை சரியில்லை, கண்ட்ரோலை ரத்து செய்தது மத்திய சர்க்காரின் வற்புறுத்தலினால்தான், என்பதைக் கூறுவதோடு, இந்த நெருக்கடியைப் போக்க, மத்திய சர்க்கார், முன்வந்தாக வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள், நமது மாகாண அமைச்சர்கள் என்பது தெரிகிறது. நாலைந்து ஜில்லாக்கள் தவிர, மற்ற இடமெல்லாம், இந்த ஆண்டு, விளைச்சல் அடியோடு இல்லை. நிலைமையை, மத்திய சர்க்கார் உணவு மந்திரி, நேரிலே வந்து பார்த்துவிட்டும் போயிருக்கிறார். பலமுறை, சென்னை சர்க்கார் அதிகாரிகள், டில்லி சென்று, நிலைமையைக் கூறினர் — அதைவிட விளக்கமாக நிலைமை தெரிந்திருக்கும், நேரடியாகவே, 'கிராமப்புறங்களை உணவு மந்திரி பார்வையிட்டதால். மத்திய சர்க்காருக்குத்தான், இப்போதுள்ள அரசியல் அமைப்பின்படி, பொறுப்பும், வசதியும் இருக்கிறது, உணவுப் பிரச்னை போன்றவைகளிலே, மாகாணங்களுக்கு ஏற்படும் நெருக்கடிகளைப் போக்க. மத்திய சர்க்காருக்குத்தான், உலக உணவு போர்டிலே, பேசும் வாய்ப்பும் இருக்கிறது— அண்டை அயல்நாடுகளிலே சென்று உணவுப் பொருளைக் கேட்டுப்பெற, வசதியும் அதிகாரபலமும் இருக்கிறது.

600,000 டன் உணவுப் பொருள் தேவைப்பட்டபோதே, பயமும் கவலையும் கொண்டு, பல நாடுகளுக்கு வேண்டுகோள் விடவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இப்போது அதைப்போல நாலு மடங்கு அதிகமாகிவிட்டது, நெருக்கடி. மத்திய சர்க்கார், இந்த நிலைமையை நன்கு உணர்ந்து, உடனடியாக, உதவி செய்யவேண்டும் — இங்கு வங்கப் பஞ்சம் போல ஏதும் ஏற்பட்டுவிடாதபடி தடுக்கவேண்டும். இங்குள்ள மந்திரிமார்கள், மக்களுக்குப்

போதனையும், மிராசுதாரர்களுக்கு உபதேசமும், வியாபாரிகளுக்கு தர்மத்தின் அவசியத்தையும், பேசிக் கொண்டிருப்பது தவிர, வேறு ஏதும் செய்ய முடியாது. எல்லாம் டில்லியில் இருக்கிறது.

"அரிசியே வேண்டுமென்று கேட்கக்கூடாது. ஏன் அப்படி ஒரு கெட்ட பழக்கத்தைக் கொண்டு விட்டீர்கள்? சோளம், தின்பதற்குப் பழகவேண்டும் — வேறுவகையான உணவுப் பொருளைத் தின்பதற்குப் பழகவேண்டும்" என்று, செங்கற்பட்டு, மதுராந்தகம் பகுதிகளிலே, பார்வையிட்ட, மத்திய சர்க்கார் உணவு மந்திரி, கிராமவாசிகளுக்குச் சொன்னாராம். இவ்விதம் சொல்லி விட்டுப் போய்விட்டால், கடமையைச் செய்துவிட்டதாகாது—பிரச்னையும் தீர்ந்துவிடாது. நிலைமையோ, மக்கள் மனதை உருக்கக்கூடியதாக இருக்கிறது. இருபத்து நாலு இலட்சம் டன் உணவுப்பொருள் குறைவு, இப்போது. இதைத் தீர்த்து, இந்தப் பகுதி மக்களைப் பஞ்சத்திலிருந்து மீட்கவேண்டிய பொறுப்பு, மத்திய சர்க்காருடையது. இதை மறக்கக் கூடாது. மத்திய சர்க்காரிடம் முறையிடுவது தவிர வேறு மார்க்கமுமில்லை, இந்த அரசாள்பவர்களுக்கு. ஏனெனில் இவர்கள், அந்த பேரரசின்கீழ் உள்ளவர்கள். கண்ட்ரோலை எடுத்ததுகூட மத்திய சர்க்காரின் பேச்சைக் கேட்டுத்தான் எனக்கு இஷ்டமில்லை என்று உணவு மந்திரி டாக்டர் ராஜனே கூறுகிறார். மழையே இல்லாமற் போய்விட்டது தான் இந்த நெருக்கடிக்கு மிக முக்கியமான காரணம் என்ற போதிலும், அமைச்சரே கூறுகிறார் கண்ட்ரோல் ரத்து செய்ததாலும் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று—எனவே இன்று ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடிக்கு மத்திய சர்க்காரின் போக்கும் ஒரு காரணம் என்பது விளங்குகிறது. இந்த நிலையிலே மத்திய சர்க்கார் மாகாணத்தின் பஞ்ச நிலைமையைப் போக்கும் முழுப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். வெறும் உபதேசம் போதாது. மக்களுக்கு உணவு வேண்டும்—உபதேசம் இங்கு ஏராளமாக இருக்கிறது. டில்லி சட்டசபையில், பஞ்சத்தைத் தடுப்பதற்காக ஒரு நிரந்தரக் கமிட்டியை அமைக்க வேண்டுமென்று, தோழர் அனந்த சயனம் கொண்டுவந்த தீர்மானத்தை நிராகரித்த போக்கைக் கவனிக்கும்போதுதான், இந்த நிலைமையிலும், மத்திய சர்க்கார் தன்பொறுப்பைத் தட்டிக் கழித்து விடுமோ என்ற பயம் பிறக்கிறது. மக்கள் நன்கு அறிவார்கள், இப்போது, எதற்கும் டில்லி நோக்கித்தான் தவம் கிடக்கவேண்டிய நிலைமை என்பதை. எனவே டில்லி, தன் கடமையை மறக்கக்கூடாது என்பதை வலியுறுத்திக்கூறுகிறோம். பேரரசின் கீழ் ஓர் அங்கமாக இருப்பதைப் பெறற்கரிய பேறு எனறு கூறிப் பூரிப்பவர்களும் டில்லிக்கு அதன் கடமையை உணர்த்த வேண்டும், உறுதியுடன். ஏனெனில் பிரச்னை உணவு சம்பந்தமானது—பல இலட்சம் மக்களின் உயிரைக்காப்பாற்றும் மகத்தான பிரச்னை.

நிலைமையை நேரில் கண்ட மத்திய சர்க்கார் உணவு மந்திரி சென்னையில் இதற்காக ஓர் கமிட்டி அமைத்துவிட்டுப்போயிருப்பதாகத் தெரிகிறது. உணவுத்தானியங்களை ஒதுக்கித்தரும் விஷயமாக இந்தக்கமிட்டி வேலை செய்யுமாம்.

மத்திய சர்க்கார் அதிகாரிகள் சிலரும் இந்தக்கமிட்டியிலே அங்கத்தினர்களாக இருப்பார்கள். இவ்விதம் ஒரு கமிட்டி ஏற்படுத்திவிடுவதுடன் கடமை முடிந்துபோய்விட்டது எனறு எண்ணிவிடாமல் மத்தியசர்க்கார் கிடைக்கக்கூடிய இடங்களிலிருந்தெல்லாம் கிடைக்கக் கூடிய வகையான உணவுப்பொருள்களை உடனடியாகச் சேகரித்து இந்த அனுப்பிப் பேராபத்து மக்களைத் தாக்காதபடி தடுக்கவேண்டும்.

*

# அகில தமிழர் மாநாடு

14, 15-2-48 தேதிகளில் சென்னையில் நடைபெற்றது. தோழர் எஸ். வெங்கடேச அய்யங்கார் அவர்கள் மாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவராய் இருந்து பணியாற்றினார். நாவலர்-S. சோமசுந்தர பாரதியார், M. A; B. L; அவர்கள் மாநாட்டுக்குத் தலைமை வகித்தார். சென்னை மாகாணத்து இலாக்கா மந்திரி கனம் பக்தவத்சலம் அவர்கள் மாநாட்டைத் திறந்துவைத்தார்.

சென்னை அசம்பிளித் தலைவர் J. சிவசண்முகம், தோழர் காமராஜர், G.D. நாயுடு, ஊத்துமலைஜமீந்தார், திரு. வி. கலியாணசுந்தரனார், P. T. இராஜன், மீனாம்பாள் சிவராஜ், S. முத்தய்யா முதலியார், K. A. P. விசுவநாதன் முதலிய பல பிரமுகர்கள் மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

காலஞ்சென்ற டாக்டர் C. நடேச முதலியார், வ. உ. சிதம்பரம்பிள்ளை சிங்காரவேல் செட்டியார் ஆகியோரின் உருவப்படங்கள் P. T. இராஜன் அவர்களாலும், K. A. P. விசுவநாதன் அவர்களாலும் திரு. வி. கலியாண சுந்தரனார் அவர்களாலும் திறந்துவைக்கப் பட்டன.

காந்தியடிகளின் மறைவு குறித்த ஓர் அனுதாபத் தீர்மானம் தலைவரால் கொண்டுவரப்பட்டு, எல்லோரும் எழுந்து நின்று காந்தியடிகளின் மறைவு குறித்துத் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டனர்.

தனித்தமிழ் அரசுவேண்டுமென்ற தீர்மானத்தைத் தோழர் G. D. நாயுடு அவர்கள் பிரேரபித்து, அத்தீர்மானத்தின் முக்கிய நோக்கம், பொருளாதாரம், தொழில் வளர்ச்சி ஆகியவைதான் என்பதைக் குறிப்பிட்டும், இதற்காகவே வடநாட்டுத் தொடர்பிலிருந்து தமிழ்நாடு தனிஅரசாகப் பிரியவேண்டுமென்பதை விளக்கியும் பேசினார்—இத்தீர்மானம் தோழர் K. A. P. விசுவநாதன் அவர்களால் ஆமோதிக்கப்பட்டுப் பெருவாரி ஓட்டுக்களால் நிறைவேற்றப்பட்டது.

பின்னர், பலதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பாரிஸ்டர் K. C. சுப்பிரமணியம் செட்டியார் அவர்களின் நன்றிகூறலுடன் மாநாடு இனிது முடிவுற்றது.


## புதிய வெளியீடுகள்!

1. மகாகவி பாரதியார்

தமிழ்நாட்டின் தனிப்பெரும் கவிஞர் பாரதிதாசன், அண்ணாத்துரை இருவரின் கருத்தோவியங்கள்.

விலை அணா 8

2. முல்லைக்காடு

புரட்சிக் கவிஞரின் பழைய கவிதைகளின் தொகுதி.

விலை அணா 12.

தபாற்செலவு வேறு. ஏஜண்டுகள்தேவை.

நிர்வாகி,
ஞாயிறு நூற்பதிப்பகம்
28. அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி,
புதுச்சேரி.

# ஆதென்ஸ் நகரில் அன்றோர் நாள்

## அறிஞனை அழித்தபின் அழுகுரல்

“மெலிடஸ்!”

“யார் அது?..........”

“என்னப்பா மிரட்சி....ஏன்....”

“அடடே! நீயா? அனிடஸ்! வா! யாரோ என்று எண்ணிக்கொண்டு ..........”

“மிரண்டே போனாயே! பைத்யக்காரா, இனி என்ன பயம்! ஜெயம், கிடைத்த பிறகு, பயம் ஏன்?”

“அனிடஸ்! கேலி செய்யாதே. திடீரென்று, பேச்சுக்குரல் கேட்கவே, சற்றுத் திடுக்கிட்டுப் போனேன்—”

“ஆழ்ந்த சிந்தனையோ?”

“ஆமாம் — ஏதோ யோசித்துக் கொண்டிருந்தேன். அது கிடக்கட்டும், என்ன பேசிக்கொள்கிறார்கள்.”

“பேசுகிறார்களா! மெலிடஸ்! புகழ்கிறார்கள் — நாம் கேட்டால் பொன்னைக் கொட்டுவார்கள் நம் காலடியிலே........”

“சீமான்களின் போக்கை அல்ல, நான் கேட்பது—அவர்கள் வேறு எப்படி இருக்கமுடியும்? மக்கள் என்ன பேசுகிறார்கள்.”

“குப்பலா! கூவுகிறது—கொக்கரிக்கிறது. ஐயோ, பாவம், வயதானவர், யார், வம்புக்கும் வராதவர், அவரைக் கொன்று போடுவதா, என்று பேசுகிறார்கள், சிலர்—சிலர், அதைச் சொல்வானேன், வீண் தொல்லை ஏதேனும் வந்தால் என்ன செய்வது என்று எண்ணிப் பயந்து போயுள்ளனர். மக்களின் போக்கு, ஒரே நிலையாகவா இருக்கும்! அதைப்பற்றி நமக்கென்ன கவலை. நண்பா! மாளிகைகளிலே, மகிழ்ச்சி! நமக்குப் பாராட்டுதல்! அபாரமான திறமையுள்ளவர்கள், எடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடிக்கக் கூடியவர்கள், என்று புகழ்கிறார்கள். மெலிடஸ்! சீமான்களுக்கு, நம்மிடம் உள்ளூரப் பயம் கூட.”

“பயமா? நம்மிடமா? ஏன்?”

“ஏன், உன் மூளை இப்படி வரண்டுவிட்டது மெலிடஸ்! பயம் ஏன் உண்டாகாது அவர்களுக்கு. அப்படிப்பட்ட சாக்ரடீசையே, நாம், வீழ்த்தினோமே, எவ்வளவு சாமர்த்தியமாக வேலை செய்து, வெற்றி பெற்றோம்,—அந்தத் திறமை, தங்களுக்கு எதிராகப் பாயுமானால், என்ன செய்வது என்று அவர்கள் எண்ணிப் பயப்படாமலிருக்க முடியுமா? ஆகவே, மெலிடஸ்!, கிரேக்க நாட்டிலே, இனி நாம் இருவரும் இட்டதுதான் சட்டம். நமக்கு இந்தச் சீமான்களெல்லாம் அடக்கம். விழாக் கொண்டாடவேண்டிய சமயத்திலே, நீ, எதையோ எண்ணிக்கொண்டு, விசாரப்படுகிறாயே! வா, போவோம். விருந்து மண்டபத்திலே, நமக்காகச் சில நண்பர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். சுவையுள்ள திராட்சை ரசம், அதைவிட இனிக்கும் கீதம், நேத்திரானந்தமான நடனம், எல்லாம் நமக்காக! வா, வா,”

* * *

உண்மைதான்! உலுத்தர் சிலர், உத்தமன் மறைந்தது கேட்டு, உள்ளம் பூரிப்படைந்து, அந்த நாளை, இன்ப நாளாகக் கருதி, விருந்துண்டனர்—விழா என்று கொண்டனர்.

அவனும், அன்று விழா என்றுதான் எண்ணிக்கொண்டு வீட்டினின்றும் கிளம்பினான். பட்டாலான அங்கி அணிந்துகொண்டான். சரிகை வேலைப்பாடும் அந்த அங்கியில். திராட்சை ரசமும் பருகினான். காதல் ரசம் தரும் காரிகையின் இல்லம் சென்று, சிறிதுநேரம் பொழுது போக்கினான். கீதம் கேட்டான் — நாட்டியமும் கண்டான்— சுவையுள்ள கனி வகைகளைச் சுந்தர மாது தந்தாள்—தின்றான். சிரிப்பு மூட்டினாள் சிங்காரி, சிரித்தான். சிலாகித்துப் பேசினாள், அவன் வீர தீரத்தை—அவனும் அவள் அழகைப் புகழ்ந்தான். அவள் மகிழ்ந்தாள்—அவன் மகிழவில்லை.

“அம்மா! கேட்டீர்களா?” என்று அலறிக் கொண்டோடி வந்த பணிப் பெண், கூறினாள், களிப்பூட்டும் கடமையில் ஈடுபட்டிருந்தவளிடம், “சாக்ரடீஸ் செத்துவிட்டார். விஷம் கொடுக்கப்பட்டதாம் — சாப்பிட்டு விட்டாராம் — இறந்துவிட்டாராம்” என்று. பெருமூச்செறிந்தான் மெலிடஸ். களிப்பூட்டினவளின் கண்களிலே நீர்தளும்பிற்று. கையிலிருந்த, கோப்பையைக் கீழே வீசினான்—மேலங்கியை இழுத்துப் போர்த்துக் கொண்டு, அவ்விடத்தை விட்டுக் கிளம்பினான். சென்ற இடமெங்கும், அதே பேச்சு. சாக்ரடீஸ் இறந்துவிட்டார்! சாக்ரடீஸ் மறைந்துவிட்டார்! உத்தமன் உயிர் நீத்தான்! உண்மைக்குழைத்தவன் இறந்தான்! மெலிடசின் செவியிலே, இந்தச் சத்தம், சர்ப்பம்போல நுழைந்தது. அப்பப்பா! இந்தப் பேச்சு எழாத ஏதாவதோர் இடம் கிடைக்காதா — இதைத் தவிர வேறே பேச்சே கிடைக்கவில்லையா, இந்த மக்களுக்கு! என்ன மக்கள்!

பழம், பழம்!—என்று கூவி விற்க வேண்டியவள்—அநியாயம்—அநியாயம், என்று கூவுகிறாள், என்னடியம்மா என்று கேட்டால், சாக்ரடீஸ் இறந்துவிட்டார் என்று கூறுகிறாள்.

கிரேக்க நாடு முழுவதுமே இதே பேச்சுத்தானா!

மெலிடசின் மனம் குழப்பலாயிற்று.

அவனை அறிந்தவர்களிற் சிலர், அவனைக் கண்டும் காணாதவர்கள் போலச் சென்றனர்—சிலர் அருவருப்பைக் காட்டினர். அவன் யாரென்று அறியாத சிலர், “பாவிகள் செய்த சூழ்ச்சியால், உத்தமர் உயிரிழந்தார்” என்றும் பேசினர். பல இடங்களிலும், மக்கள் கூடிக் கூடிப் பேசினர்—எங்கும் துக்கம்—கலக்கம் — கண்ணீர் — ஆதென்ஸ் நகரமே தன்னைப் பார்த்துக் கேலி செய்வதுபோலிருந்தது. மெலிடஸ், வேகமாக நடந்து பார்த்தான்—மெல்ல நடந்துபார்த்தான் — பான வகைகளைப் பருகிப் பார்த்தான்—தோட்டங்களிலே உலவிப் பார்த்தான். எங்கு சென்றாலும், என்ன செய்தாலும், மன நிம்மதி இல்லை. சாக்ரடீஸ், எங்கும் நிறைநாதமாகி விட்டது கண்டான், மருண்டான்.

“செச்சே! கோழை உள்ளம்!” என்று தனக்குத்தானே கூறிக் கொண்டான்.

“ஒரு நாள், இரண்டு நாள் இப்படித்தான் இருக்கும். மக்கள் பேசு

# காதகர் வீசும் வலையில் வீழ்ந்தோர்
# கருத்து தெளிந்ததும் கதறுவர்

வர்—பிறகு—பிறகு...........மறந்து விடுவர்........'' என்று எண்ணித், தைரியம் பெற முயற்சித்தான்

''உலகம் உள்ளளவும் உத்தமரின் பெயர் நிலைத்திருக்கும்'' என்று ஒரு குரல் கேட்டது—ஆடுகளை ஓட்டிக் கொண்டு செல்பவனொருவன், பேசுகிறான், வேறொருவனிடம்.

உலகம் உள்ளளவும்! அந்தவார்த்தைகள், மெலிடசின் இருதயத்தைக் குத்தலாயின! எங்காவது ஒரு தனியிடத்தில் உட்கார்ந்து, யாரும் காணாதபடி இருந்து கொண்டு, கோவெனக் கதறவேண்டும் போலத் தோன்றிற்று-சாக்ரடீஸ்! சாக்ரடீஸ்! எங்கும்! எவருடைய எண்ணத்திலும்! ஆதென்ஸ் நகரெங்கும் உலவுகிறான். முதியவரின் முகத்திலே தோய்ந்திருந்த கவலையில், மாதரின் திகைப்பில், வாலிபரின் கோபப்பார்வையில், சிறுவர்களின் சோகமுகத்திலே, சாக்ரடீஸ்! மெலிடசின் கண்களுக்கு, எங்கு நோக்கினும், சாக்ரடீசே தெரியலாயிற்று. எப்படிப் பட்ட கோலத்தில்! ''பைத்யக்காரா! என்னைச் சாகடிப்பதால் என்ன இலாபம் உனக்கு!'' என்று தன்னை நோக்கிக் கேட்டுவிட்டுச் சிரிப்பது போன்ற கோலத்துடன், சாக்ரடீஸ் தெரியலானர்.

ஆற்றிலே விழுந்து, அலுப்பு ஏற்படும்வரை, நீந்தியும், கால் கடுக்கும் அளவுக்கு, குன்றுகளின்மீது ஏறி இறங்கியும், பார்த்தான்—களைத்துப் படுத்துத்தூங்கிவிடலாம் என்று. முடியவில்லை. அனிடசைக் கண்டு பேசுவோம், என்று யோசித்தான்—அனிடசும் எதிர்ப்பட்டான்—பேசினன். ஆனல் மெலிடசுக்கு அவனிடம் பேசிக்கொண்டிருக்க மனம் இடம் தரவில்லை. ஏதோ அவசர வேலை இருப்பதாகக் கூறிவிட்டு, மேலும், பல இடங்களிலே சுற்றிச் சுற்றி அலைந்துகொண்டிருந்தான்—சாக்ரடீசும், அவனைவிட்டு விலகாமல், கூடவே சென்று, கேலிக்குரலிலேபேசினன். ''மேலிடஸ்! வெற்றி யாருக்கு! உயிரோடு உலவும் உனக்கா? உயிர் இழந்த எனக்கா?'' என்று சாக்ரடீஸ் கேட்பதுபோலத் தோன்றிற்று.

''சாக்ரடீஸ் பிணமானன் நான் பித்தன் — அவனைப்பற்றி எண்ணிக் கிலி கொள்கிறேன்'' என்று மெலிடஸ் எண்ணலானன்.

''சாக்ரடீஸ் இறந்தால் என்ன? அவருடைய சக்தி எங்கு போகும்!'' —யாரோ ஒரு வாலிபன், ஆத்திரம் கலந்த குரலில் பேசுகிறான், வேறு யாரிடமோ.

''அவன் கண்களில் படக்கூடாது-ஆபத்து'' என்று எண்ணிய மெலிடஸ் கள்ளன் போலப்பதுங்கிக் கொண்டான், ஒரு பழைய இடிந்துகிடந்த வீட்டிற்குள்.

* * *

''பாட்டி! அவருக்கு வயது எவ்வளவு?'' — யாரோ சிறுவன் கேட்கிறான்.

''எழுவது, குழந்தே! எழுவது வயதாகுது. அவ்வளவு வயதானவரைத்தானடா அப்பா! பாவிகள் சேர்ந்து சதிசெய்து, சாகடித்தார்கள்''—கிழவி ஒருவள் பதில் கூறுகிறாள்.

மெலிடஸ், வீட்டிற்குள் போகவில்லை. கல்லும் மண்ணும் குவிந்து கிடந்தது — அதன்மேல் உட்கார்ந்து கொண்டான்—உள்ளே போகப் பயந்து.

''பாவம்! கிழவர், என்ன செய்தாராம்''—சிறுவன் கேட்கிறான்.

''புத்திமோடு இருக்கும்படி ஜனங்களுக்கு உபதேசம் செய்துவந்தார். புரட்டுச்செய்பவர்களைக் கண்டித்து வந்தார்.'' கிழவி கூறினாள்.

''நல்ல காரியந்தானே பாட்டி அது''—கபடமற்ற உள்ளம், சிறுவனுக்கு, அவன் கேட்கிறான் அது போல்

''பொல்லாதவர்களுக்கு நல்லகாரியம் செய்பவர்களைப்பார்த்தால், மனம் பொறுக்குமா? புறா எவ்வளவு அழகாக இருக்கிறது, அதை அடித்துத் தின்னும் வல்லூறைப் பார், எப்படி இருக்கிறது!'' கிழவி பேசுகிறாள்.

வெளியே சென்றுவிட வேண்டும் என்று எண்ணலானன் மெலிடஸ்.

''பாட்டி! நான் பெரியவனானபிறகு, சாக்ரடீஸ் தாத்தாவைக் கொன்ற காதகனைக் கண்டால், நிச்சயமாகக் கொன்று போடுவேன்''—சிறுவன் பேசுகிறான் சீற்றத்துடன். கிழவி, முத்தம் தருகிறாள்—தந்துவிட்டுச் சொல்கிறாள், ''குழந்தே! அவ்வளவு காலம் தேவையில்லை. ஏதோ, நமது ஜனங்கள், அவசரப்பட்டு, சூழ்ச்சி செய்த காதகர்களின் வலையிலே வீழ்ந்து, இந்தக் காரியத்துக்கு உடந்தையாக இருந்துவிட்டனர். இனி, சீக்கிரத்திலேயே அவர்களின் புத்தியிலே தெளிவு ஏற்பட்டுவிடும். தாங்கள் செய்த தவறை உணருவார்கள். உணர்ந்து, எந்தெந்தப்பாவிகள் இந்தச்சதியைச் செய்தார்களோ, அவர்களைக், கண்டதுண்டமாக்கிக் கழுகுக்குப் போடுவார்கள்''—கிழவி ஆத்திரத்துடன் பேசினாள்.

மெலிடஸ், மெள்ள, அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டுவிட்டான். மீண்டும், சுற்றி அலையலானன் பித்தன் போல.

மெலிடஸ், வீணாக விசாரத்தில் மூழ்கினன்—கோழை அவன்—காரியமோ வெற்றிகரமாக முடிந்துவிட்டது—காலோகளை எல்லாம் தன் பக்கம் சேர்த்துக்கொண்டு, கிரேக்க நாட்டுக்கு, முடிசூடா மன்னன் போலிருந்து வந்தசாக்ரடீஸ் இறந்து போனபிறகு, பீதி ஏன் கொள்ள வேண்டும்—பொன் தரப் பூமான்கள் உள்ளனர்— அரசாள்பவர்களின்ஆதரவும் கிடைக்கும்—அரச மன்றத்திலேயே இடம்உண்டு—இனி கிரேக்க நாட்டிலே, நாம் ஓர் பிரமுகர் ஆகலாம், இவ்வளவு வசதியும், அந்த ஆசாமி ஒழிந்ததால் நமக்குக் கிடைக்கிறது. இதை எண்ணி மகிழ வேண்டிய வேளை இது—இந்த மெலிடஸ், பைத்யக்காரன், ஏதோ பிரண்டு போய்க்கிடக்கிறானே'' என்று எண்ணிக் கொண்டு, அனிடஸ், ஆனந்தமாகச் சென்றுகொண்டிருந்தான். எதிரே வந்த ஒரு அடிமையைக் கண்டு, ''ஏ! உன் எஜமானர் வீட்டில் இருக்கிறாரா?'' என்று கேட்டான்.

''இருக்கிறார்''—அவன் சற்று அலட்சியமாகவே பதிலளித்தான்.

''என்ன செய்துகொண்டிருக்கிறார்''—அனிடஸ் கேட்டான்.

''தன், ஒரே புதல்வியின் உயிர் துடிப்பது கண்டு, கோவெனக் கத

# சதிகாரர்கள் திண்டாட்டம் புதிய சக்தி பிறந்தது

றிக் கொண்டிருக்கிறார்" என்று பதிலளித்துவிட்டு, அவசரமாகச் சென்று விட்டான்.

காதல் கை கூடாவிட்டால் கன்னியரின் உயிர் துடிக்கும், என்ற ஒரு கவிதை, அனிடசின் நினைவிற்கு வந்தது. நண்பனின் மகளுக்கு இந்த நோயாகத்தான் இருக்கும் என்று எண்ணிக்கொண்டு, அங்கு சென்றான் - ஆனால் அங்கு சென்ற பிறகு, அனிடஸ், மெலிடஸ்ஆனான்!

அழகிய இளமங்கை! அவளுடைய மண்டையிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. தூய வெண்ணிற ஆடை முழுவதும், இரத்தமயமாகிக் கிடந்தது. கண்மூடிக்கிடந்தது, உயிர் போகவில்லை—ஆனால், மிக ஆபத்தான நிலை.

"அருமை மகளே! ஐயோ! அருமை மகளே!" என்று கதறிக் கொண்டிருந்தான், சீமான். வேலையாட்களும், நண்பர்கள் சிலரும் அவனைச் சுற்றி இருந்தனர். அனிடசை சீமான் பார்க்கவில்லை.

ஒரு வேலையாளைக் கேட்டான் அனிடஸ், என்ன நடந்தது என்று.

"மாடியிலிருந்து விழுந்து விட்டார்கள்—சின்னம்மா" என்றான் வேலையாள்.

"தவறி...............?" என்று கேட்டான், அனிடஸ்.

"வேண்டுமென்றே. சாக வேண்டுமென்று தீர்மானித்து. உயிரைப் போக்கிக்கொள்ளவே, மாடியிலிருந்து கீழே வீழ்ந்தார்கள்." வேலையாள் விளக்கினான்.

"ஏன்?" என்று கேட்டான் அனிடஸ். வேலையாள் பதில்கூறுவதற்குள் "காதல் விஷயமா?" என்றுமற்றோர் கேள்வியைச் சேர்த்தான்.

"யாரய்யா நீர் பைத்யக்காரராக இருக்கிறீர்—காதலாம்—காதல்—சாக்ரடீஸ் இறந்த சேதி கேட்டதும், மனம் உடைந்துபோய், அப்படிப்பட்ட உத்தமரைக் கொன்ற, நாட்டிலே இனி உயிரோடு இருப்பதே தவறு என்று தீர்மானித்து, சின்னம்மா, தன் உயிரை மாய்த்துக் கொள்ள, இப்படிச் செய்து விட்டார்கள்" என்றான்.

அந்தப்பேச்சு, அனிடசை, மெலிடசாக்கிவிட்டது. சாக்ரடீசின் மரணம், இவ்வளவு பெரிய மன அதிர்ச்சியை உண்டாக்கி விட்டதா! ஒரு பெண், தன் உயிரைத் துரும்பென மதித்துவிட்டாள்—உத்தமன் இறந்தான், உலகிலே இனி நானும் உயிர் வாழேன் என்று கூறினாள்.

அனிடசுக்கு, அங்கு நிற்கவும் பயமாகி விட்டது.

மாளிகையை விட்டுக் கிளம்பினான்—ஆனால் அவனைச் சாக்ரடீஸ் துரத்தலானார்.

அநியாயம்! அக்ரமம்!—என்று பேசும் மக்கள்.

அரசாள்கிறார்களாம், அரசு! அறிஞனைக் கொலைசெய்துவிட்ட அக்ரமக்காரர்கள்—என்று கண்டனக் குரல்.

பொறாமை பிடித்தவர்கள்—வஞ்சகர்கள்—கொலைபாதகர்கள்— என்ற சூடான சொற்கள்.

"சதிசெய்தனர், சாக்ரடீசைக் கொல்ல—அந்தச் சண்டாள மெலிடசும் அயோக்ய அனிடசும் செய்த சதி இது"—யாரோவிஷயமறிந்தவர்கள் குற்றம் சாட்டியேபேசலாயினர்.

"சுயநலக்காரரின் கைப் பாவைகள்." —மற்றொருவன் இழிவாகப் பேசலானான்.

"இந்த அக்ரமத்தைச் சகித்துக் கொண்ட நாம்?" யாரோ ஒருவன் கேட்கிறான்.

"நாமா? மரக்கட்டைகள்—மண்பொம்மைகள்! மாமிசப்பிண்டங்கள்—மக்களில் பதர்—நன்றிகெட்டவர்கள்—நாம் மனிதரா? அல்ல! மிருகங்கூட அல்ல. மிருகமும், தன் தாய் தந்தையரைத் தாக்கும் மிருகத்தையோ, வேட்டைக்காரனையோ, திருப்பித் தாக்கும். நாம் அதனைவிட இழிவான குணமுள்ளவர்கள், நமது நாட்டு ஒப்பற்ற ஞானியின் உயிரை, உலுத்தர் சிலர் போக்கச் சதி செய்தனர்—நாம் வாய் மூடிக்கிடந்தோம்—" என்று கோபமாகவேறொருவன் பேசலானான்.

அனிடசுக்குப் பயம் அதிகரித்து விட்டது! மெலிடசைக் கேலி செய்தோம்—இப்போது, நமது நிலை என்ன, என்று எண்ணியபடி, ஓட்டம் பெருநடையாக, அந்த வீதியை விட்டுச் சென்றான்—மெலிடஸ் போலவே அனிடசும் அலைந்தான், திரிந்தான், எங்கு சென்றாலும், சாக்ரடீசையே கண்டான். அவன் மனமும் குழம்பிவிட்டது.

சாக்ரடீஸ், குற்றம் செய்தான்—கிரேக்க நாட்டு வாலிபர்களின் மனதைக் கெடுத்து, பழையஐதிகங்களைப் பாழ்படுத்தி, மதத்தின் மாண்புகளை நாசமாக்கி, கடவுள் உணர்ச்சியை உருக்குலைத்தான், எனவே, விஷம் கொடுத்துச் சாகடிக்க வேண்டும் அந்த விதண்டாவாதக்காரனை, என்று அறமன்றத்திலே பேசியவர்கள், அவர்களுக்குத் துணை நின்றவர்கள், சாக்ரடீசின் செல்வாக்கைக் கண்டு மனம் புழுங்கி, அவன் இருக்குமட்டும் தங்கள் ஆதிக்கம் பரவ வழி இல்லை என்று எண்ணி, சதி செய்தவர்கள், யாவரும், சாக்ரடீஸ் பிணமான பிறகு, பெரும் பீதி அடைந்தனர்.

சாக்ரடீஸ் உயிரோடு இருந்த போதாவது, உள்ளூர அவனிடம் அச்சம் இருந்தபோதிலும், போலிக் கௌரவம் காட்டுவதற்காக, அவனைப் பற்றி அலட்சியமாகப்பேசினர். சாக்ரடீஸ், மனம் கலங்காமல், விஷத்தை உட்கொண்டு உயிர் துறந்த பிறகோ, அவர்களின் அச்சம் ஆயிரமடங்கு அதிகரித்து விட்டது. சாக்ரடீசிடம் மக்களுக்கு எவ்வளவு அன்பு இருந்துவந்தது என்பது மிக விளக்கமாகத் தெரியலாயிற்று. சாக்ரடீசின், பரிதாபகரமான முடிவுக்கு யாரார் காரணமோ அவர்களைத் தங்கள் கோபப் பார்வையாலேயே சுட்டுச் சாம்பலாக்கிவிடக் கூடிய அளவு ஆத்திரமுற்று மக்கள் இருக்கக்கண்டனர்—மருண்டனர். சாக்ரடீஸ், இறந்தது, தங்களுக்கே பெரும் ஆபத்து என்று எண்ணினர். ஏன் செய்தோம், தீய காரியத்தை? ஏன், சதி செய்தோம், சத்புருஷன், விவேகி, ஞானவான், அறிஞன், என்று மக்கள் மனமாரக் கூறுகிறார்களே, அப்படிப்பட்டவனை அழிக்க, நாம் ஏன் முனைந்தோம்—என்று சதி புரிந்தவர்களே எண்ணினர். பயமும் துக்கமும் பிடித்தாட்டிற்று அவர்களை. சாக்ரடீசின் மரணம், புதியதோர்சக்தியையெழுப்பி விட்டது. அந்தப் புதிய சக்திக்கு, சாக்ரடீசுக்கு இருந்ததைவிட அதிக

# புதியதோர் படைவரிசை எழுந்தது
# புரட்டர் கோட்டத்தை அழிக்க முனைந்தது

செல்வாக்கு ஏற்பட்டுவிட்டது. வயலோரம், வாய்க்கால் பக்கம், பூந்தோட்டம், கடைவீதி, விளையாட்டு மைதானம், சிலம்பக்கூடம், காரியக்கர்த்தர்களின் வீடு, ஓவியர் இல்லங்கள், நீராடுமிடங்கள், சிற்பிகளின செயலிடங்கள், எங்கெங்கும், சாக்ரடீசின் படை வரிசை!

"மெலிடஸ்! அனிடஸ்! அந்த மாபாவிகளின் வேலைதான், இந்தக் கொலை!" — என்ற குரல் கிளம்பலாயிற்று.

"வயது எழுபது. வாழ்க்கை முழுவதையும், மக்கள் நலனுக்கே செலவிட்டார். செல்வம், சுகம், அந்தஸ்து, எதையும் நாடாமல்உழைத்தார். கிரேக்க நாட்டுக்கு அறிவுப் படைதிரட்டித் தந்தார். அவருக்கு நாடு, தந்த பரிசு, விஷம்! விவேகிக்கு விஷமூட்டினோம்! வீணர்சிலருடைய விபரீத மனப்போக்கை அறியாமல், பேரறிஞனைப் பிணமாக்கிவிட்டோம். மதத்தைக் கெடுக்கிறார் என்று மடைத்தனமாக நம்பி மனிதருள் மாணிக்கத்தை மாய்த்துவிட்டோம். அறிவு தந்தவனை அழித்தோம். அன்பு தந்தவனைக் கொன்றோம்". என்று மக்கள் சோகித்தனர். சோகத்தில் மக்கள் ஆழ்ந்திருந்ததால்தான், மெலிடசும், அனிடசும் தப்பினர்—இல்லையேல், அன்றே, அவர்கள் பிணமாகி இருப்பர். சில நாட்கள் உயிரோடு விட்டுவைக்கப் பட்டனர்—நடைப்பிணங்களாக.

மெலிடசும் அனிடசும், பயத்தை ஒருவாறு போக்கிக் கொண்டு, மக்களுக்கு ஏற்பட்ட மன அதிர்ச்சி அடங்கிவிட்ட பிறகு தங்கள் நிலைமை சரிப்பட்டுவிடும் என்று எண்ணினர்—ஏமாந்தனர். மன அதிர்ச்சியோடு, நின்றுவிடவில்லை. மக்கள் மனதிலே, ஆழப்பதிந்துவிட்டது அந்தச் சம்பவம். துக்கம், வெட்கம், கோபம், ஏதாவதுசெய்தாலொழிய அடங்காது ஆத்திரம் என்ற துடிப்பு, இவ்வளவும், மக்களுக்குஏற்பட்டுவிடவே, அவர்கள், புயலாயினர்

சாக்ரடீசின் நண்பர்கள்—கடைசி நேரம் வரையில் அவருடன் இருந்தவர்கள்—அவர் பழி பாவமற்றவர் என்று வாதிட்டவர்கள் — அறமன்றத்திலே அவர் சார்பாகப் பேசினவர்கள் — ஆகியோரைக் காணும் போதெல்லாம், மக்கள் வெட்கமுற்றனர்; இந்த அறிஞர்களின் உரையை ஏற்க மறுத்தோம், மாபாவி மெலிடசின் மொழியை நம்பி, மோசம் போனோம், என்று உள்ளம் உருகி உரைத்தனர்.

"நடந்தது நடந்துவிட்டது, இனி என்ன செய்வது?"-என்று சோகத்துடன் கூறினர்.

"இனி என்ன செய்வதா? இந்த அக்ரமத்தைத் துணிந்து செய்த சதிகார மெலிடசையும் அனிடசையும்,..........." என்று துவக்கினான், யாரோ ஒருவன். "ஆமாம்! கொல்ல வேண்டும்!!" என்று பலர் கூவினர்.

"மெலிடஸ்! அனிடஸ்! பிடி! அடி! விடாதே! கொல்லு!—" ஆதென்ஸ் நகரிலே இந்த முழக்கம் கிளம்பி, வேகமாக வலுவடைந்தது.

சாக்ரடீஸ் மாசற்றவர் — மதிவாணர்.

"அவர் மதத்தைக்கெடுக்கவுமில்லை — மக்களைத் தவறான வழியில் கொண்டு செல்லவுமில்லை.

மதத்தின் பெயர்கூறி நம்மைச் சிலர் கெடுத்துவந்தனர்—சாக்ரடீஸ், இந்த உண்மையை நமக்குச் சொன்னார்.

சிந்தனையைக் கிளறினார்—சொந்தப்புத்தியை எந்தப்புத்தியையும் விட மேலானது என்று சொன்னார்.

அவருடைய உள்ளம் தூய்மையானது—பேச்சு, பெரும் அறிவு விருந்து.

புரட்டர்களை அவர் அம்பலத்துக்கு இழுத்தார். மதப்போர்வையாளர்களைத்திரை நவைத்தார், ஞானிகள் என்றுகூறி மக்களை ஏய்த்து வந்த அஞ்ஞானிகளை அவர் விரட்டினார்.

குருமார்கள், குருட்டறிவினர் என்பதை விளக்கினார்.

உன்னை உணர்! உண்மையைநாடு! உள்ளத்தைத் தூய்மையின் இருப்பிடமாக்கு! ஆராய்ந்துபார்! அறிவைப்போற்று!—என்ற அறவுரைகளை நமக்கு அளித்தார். அப்படிப்பட்டவரை, அறிவிலிகளான நாம், நன்றிகாட்டத் தெரியாத நாம், நயவஞ்சகர்களின் பேச்சைக் கேட்டுக்கொண்டு, நஞ்சிட்டுக் கொன்றோம்." என்ற பேச்சு, ஆதென்ஸ் நகரெங்கும் எழலாயிற்று.

நயவஞ்சகர்களான மெலிடசையும் அனிடசையும், கொன்றாலன்றி ஆத்திரம் அடங்காது என்று கூவினர் மக்கள்.

(2-ம் பக்கம் பார்க்க)

பல அறிஞர்களாலும், பத்திரிகைகளாலும்
மிகச்சிறந்த நூல் எனப்புகழப்பட்ட

**கார்ல் மார்க்ஸ்**

ஆசிரியர்.

**எஸ். சதாசிவம்**

என்னும் நூல் விற்பனைக்குத் தயார்

தனிப்பிரதி ரூ **1—0—0**

விற்பனையாளர்களுக்கு 20% கழிவு

**இன்பவாழ்வுப் பதிப்பகம்**

ஆர். எஸ். புரம்.

கோயமுத்தூர்.

Edited Printed Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi Street, Conjeeveram